விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 30 திங்கட்கிழமை (13.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

## அமைதியை சீர்குலைக்கும் முயற்சிகளுக்குள் சிக்கவேண்டாம்

ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலை திருப்திகரமாக உள்ளதாகவும் மக்களை பதற்றத்தில் ஆழ்த்தும் போலியான பிரசாரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் தத்தமது அன் 23

## தமிழின படுகொலை நினைவு வாரம் நேற்று முள்ளிவாய்க்காலில் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழ் இனப்படுகொலை நினைவு வாரம் நேற்று முள்ளிவாய்க்காலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் நேற்றையதினம் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்ட 24

## தாக்குதலுடன் தொடர்புடைய எவரையும் பாதுகாக்க போவதில்லை - ரணில்

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் பாதுகாக்கப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எல்பிட்டி, கரந்தெனிய - பெந்தர, நியாகம, வெலிப்பிட்டிய பிரதேச செயலாளர்கள் பிரிவைச் 23

## சிலாபத்தில் பதற்றம் ஊரடங்கு அமுல்



09

# இலங்கை கடற்படையிடமே இல்லாத கடலுக்குள் ஊடுருவித் தாக்கும் இயந்திரங்கள் அம்பாறையில் மீட்பு

(அம்பாறை)

இலங்கை கடற்படையிடமே இல்லாத கடலுக்கடியில் ஊடுருவிச்சென்று தாக்குதல் நடத்தக் கூடிய அதிநவீன நீர்மூழ்கி இயந்திரங்கள் அம்பாறையில் நேற்று பாதுகாப்புப் படைகளினால் மீட்கப்பட்டுள்ளது. (9ஆம் பக்கம் பார்க்க)



## ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அனைத்து அரச பாடசாலைகளும் தரம் 1 தொடக்கம் 13 வரை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 24

## இன்றைய தாக்குதல் தொடர்பில் எவ்வித உண்மையும் இல்லை

பாதுகாப்பு செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பின் பல பகுதியில் இன்றையதினம் தாக்குதல் நடத்தப்படலாம் என வெளியாகும் தகவல்களில் எந்தவித உண்மையும் இல்லை என பாதுகாப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

போலியான தகவல்களை வெளியிட்டு மக்களை அச்சப்படுத்த வேண்டாம் என கேட்டுள்ளனர். அவ்வாறான எதுவும் தாக்குதல் தொடர்பான தகவல்கள் 24

## மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகவே நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவேண்டும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை

(கொழும்பு)

நவீன தொழிநுட்பத்தின் அனுகூலங்களை அறிவில் சிறந்த கல்விமான்களையும் புத்திஜீவிகளையும்கொண்ட உலகினை உருவாக்குவதற்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.



நவீன தொழிநுட்பம் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவேயன்றி அதனை மனித சமுதாயத்தின் அழிவுக்காக பயன்படுத்தக்கூடாது என்று நேற்று 24



ஐ.பி.எல் கிண்ணத்தை சுவீகரித்தது மும்பை

## இன்று பாடசாலை குறித்து இரு முறை சிந்திக்க வேண்டும்

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்று பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு சூழ்நிலை குறித்து அரசாங்கத்தினால் உறுதியான அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட வேண்டும். 24



## யாழில் கொள்ளைகளுடன் தொடர்புடைய அறுவர் கைது

33 பவுண் நகை, 3 மோ.சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற கொள்ளைகள் மற்றும் வழிப்பறிகளுடன் தொடர்புடைய 6 பேர்கொண்ட கும்பல் பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தக் கும்பலைச் சேர்ந்த ஆறு பேரும் அரியாலை பூம்புகார் பகுதியில் பதுங்கி 24

## தமிழர்களுக்காக வீதியில் இறங்கி போராடத் தயார்

சுமணரட்ன தேரர் அரசுக்கு எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாடசாலை மாணவர்களுக்கு சரியான பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசுக்கு இரண்டு வாரம் அவகாசம் இல்லை என்றால் வீதிக்கு இறங்கவேண்டி ஏற்படும் என மட்டு. விகாரை விகாராதிபதி சுமணரட்ன தேரர் 23

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# அடக்குமுறைகளை தாண்டி மக்கள் ஆர்ப்பரித்து எழ வேண்டும்

## எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள்

எமது இனத்திற்கு நீதியும் நியாயமும் அரசியல் விடுதலையும் கிடைக்க வேண்டும் என்பதை உறுதியாக சொல்வதற்காக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் மக்கள் அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் தாண்டி ஆர்ப்பரித்து எழவேண்டும் என எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இனத்திற்கு நீதியும் நியாயமும் அதே போல அரசியல் விடுதலையும் கிடைக்க வேண்டும் என்பதை உறுதியாக சொல்வதற்காக இதை ஆண்டு தோறும் நாங்கள் நினைவுகூர வேண்டும் என்ற அடிப்படையில் இதை நினைவுகூருவதற்கு எந்த வித தயக்கமும் இல்லாது அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் தாண்டி ஆர்ப்பரித்து மக்கள் எழுவதைப் பார்த்து சர்வதேசமும் இலங்கை அரசும் இதற்கான முடிவை வெகு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் வலியுறுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம் என வட மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியோடு நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான உறவுகள் உயிரிழந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப் படுகொலையின் நினைவு வார ஆரம்ப நிகழ்வுகள் நேற்று காலை இடம்பெற்றது. இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே வட மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார் (3,250,281)

# பிரான்ஸில் தமிழின அழிப்பினை உணர்த்தும் தெருவெளி ஆற்றுகை



இலங்கை அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழின அழிப்பின் அதி உச்ச நாளாம் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பிரான்ஸின் பாரிஸில் லாச்சப்பல் பகுதியில் கலைஞர்கள் பறையிசையோடு முள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த பாடல்களைப் பாடி கொட்டொலி முழங்க கவனயீர்ப்பை நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸில் தற்போது தொடர்ச்சியாக கடும் மழை பெய்துவரும் நிலையிலும் கலைஞர்கள் சோர்ந்து விடாமல் தமது அறைகூவலைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது எமது மக்களை மட்டுமல்லாமல் வெளிநாட்டவர்களையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. பல வெளிநாட்டவர்களும் தமது கைபேசிகளில் இதனை காணொளி எடுத்துச் சென்றதையும் காணமுடிந்தது.

இந்த 10 ஆவது ஆண்டில் எமது மக்கள் அலையெனத் திரண்டு எமக்கு ஏற்பட்ட அநீதிக்கு - கொடுமைகளுக்கு நீதி கிடைக்க சர்வதேசத்தின் முன் நிற்க வேண்டும் என கலைஞர்கள் கோரிக்கையை முன்வைத்தவாறே தமது தெருவெளி ஆற்றுகையை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

முல்லைத்தீவு காட்டுப்பகுதியில்

# சந்தேகத்துக்கிடமானோர் நடமாடியதாக இராணுவத்தினர் பாரிய தேடுதல்

முல்லைத்தீவு துணுக்காய் தென்னியங்குளம் காட்டுப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமானவர்கள் நடமாடுவதாகத் தெரிவித்து இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுசுட்டான் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பகலாகத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில் தென்னியங்குளம் காட்டுப் பகுதியில் தேடுதல் முன்னெடுக்கப்படுகிறது.

துணுக்காய் தென்னியங்குளம் காட்டுப் பகுதிக்குச் சென்று திரும்பியவர்கள் உழவு இயந்திரம் பழுதடைந்ததால் அதனை காட்டுக்குள் நிறுத்திவைத்துவிட்டு வந்துள்ளனர். அதனை மீட்பதற்காக அங்கு நேற்றுமுன்தினம் சென்ற போது, உழவு இயந்திரப் பெட்டிக்குள் கறுப்பு உடை அணிந்த மூவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருந்துள்ளதைக் கண்டுள்ளனர்.

அதனால் தமது கிராமத்துக்குத் திரும்பிய உழவு இயந்திரத்தை எடுக்கச் சென்றோர் மேலும் சிலரை அங்கு அழைத்துச் சென்ற போது, உழவு இயந்திரப் பெட்டியில் இருந்தவர்களைக் காணவில்லை.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து தென்னியங்குளம் காட்டுப் பகுதியை சுற்றிவளைத்து இராணுவத்தினர் தேடுதல்களை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் காட்டுப்பகுதிக்கு வெள்ளை வானில் வந்திறங்கிய சிலர் சென்றதை பொதுமக்கள் கண்டுள்ளனர். அவ்வாறு சென்றவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்ததையும் மக்கள் அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இரவு பகலாக நடந்த இந்தத் தேடுதலில் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை என்று முல்லைத் தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். (3)

# தேர்தலை ஒத்திவைப்பது பயங்கரவாதத்துக்கு ஒப்பானது

## மகிந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு

தேர்தல் நடத்துவதை தொடர்ந்தும் ஒத்திவைத்து வருவது பயங்கரவாதத்தைப் போன்ற ஒரு தவறான நடவடிக்கையாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையானது தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஒரு காரணம் அல்லவெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பிட்ட நாளில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாது போனால், தான் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக கூறிய அறிவிப்பு, தொடர்ந்தும் செல்லுபடியானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3)

# தாக்குதலுடன் தொடர்புடையவர் வாழைச்சேனையில் கைது

நாட்டில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் செம்மண்ணோடையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட குறித்த நபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை வீதி செம்மண்ணோடையில் வசித்து வரும் 21 வயதுடைய நபரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரின் பணிப்புரைக்கமைய வாழைச்சேனை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கும் இவருக்கும் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும், குறித்த சந்தேகநபர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு கொழும்பு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (3)

# பாடசாலைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

பாடசாலைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அன்றாட இயல்பு வாழ்க்கையை வழமை போல் கொண்டு நடத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இயல்பு நிலைமையை ஏற்படுத்தி, கூடிய ளவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல்இன்று தாக்குதல்கள் நடக்கலாம் என்று கிடைத்துள்ள தகவல்கள் தொடர்பாகவும் அவதானத்துடன் இருந்து வருகிறோம்.

எந்த தகவல்களையும் நாம் புறம்தள்ள மாட்டோம். எனினும் இந்த தகவல்களை புலனாய்வு பிரிவினர் உறுதிப்படுத்தவில்லை.

எனினும் நாடு முழுவதும் அதிகளவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் ருவான் குணசேகர குறிப்பிட்டுள்ளார். (3)

# தாக்குதல்தாரிகளின் அடையாளத்தை உறுதி செய்த டி.என்.ஏ., அறிக்கை

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் நீர்கொழும்பு, கட்டுவபிட்டி தேவாலயம் ஆகியவற்றில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலை தாக்குதல்களை நடத்திய அலாவுதீன் மொஹம்மட் முவாம், அச்சு மொஹம்மது மொஹம்மது ஹஸ்தூன் ஆகிய குண்டுதாரிகளின் அடையாளம் டி.என்.ஏ. சோதனைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களது உறவினர்களிடம் இருந்து பெறப்பட்ட டி.என்.ஏ. மூலக்கூறுகளுடன், கொச்சிக்கடை தேவாலயத்தில் இருந்து பெறப்பட்ட குண்டுதாரியான அலாவுதீன் மொஹம்மட் முவாத்தின் தலைப்பகுதி டி.என்.ஏ ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டுவபிட்டி தேவாலயத்தில் இருந்து மீட்கப்பட்ட ஹஸ்தூனின் உறுப்புக்களில் இருந்து பெறப்பட்ட டி.என்.ஏ. மூலக்கூறுகள் அவரது இரத்த சொந்தங்களின் மூலக்கூறுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஏனைய 7 குண்டுதாரிகள் தொடர்பிலான டி.என்.ஏ. சோதனைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக அரச இரசாயன பகுப்பாய்வாளர் வெலி அங்க தெரிவித்தார். (3)

# வவுனியா மணியர்குளத்தில் முச்சக்கரவண்டி தீ பிடிப்பு!



(வவுனியா)

வவுனியா மணியர்குளம் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று நேற்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

குறித்த முச்சக்கரவண்டி திடீர் என்று தீப்பிடித்துள்ளது. எனினும் அப்பகுதியில் நின்றவர்களின் வேகமான செயற்பாட்டால் தீ அணைக்கப்பட்டிருந்தது. குறித்த தீ விபத்தினால் முச்சக்கரவண்டி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மின்சார ஒழுக்கே தீ விபத்திற்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (3)

# இலங்கையில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்த

# சிரியாவிலிருந்து மிகவும் ஆபத்தான இரசாயனம்

# பாதுகாப்புத் தரப்பினர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**சிரியாவில் பயன்படுத்தப்படும் மிகவும் அபாயகரமான இரசாயனம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பயன் படுத்தப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தற்கொலைத் தாக்குதலின் போதும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் இந்த இரசாயனத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வெடி குண்டையே பயன்படுத்தியுள்ளனர் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**

இலங்கையில் யுத்தம் இடம் பெற்ற காலங்களில் விடுதலைப் புலிகள் கூட, பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான மோசமான இரசாயங்களை பயன் படுத்தவில்லை என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதிக சக்திவாய்ந்த சீ4 போன்ற இரசாயனம் இந்த குண் டுக்காக பயன்படுத்தியிருந்தால் வெடிப்பில் ஏற்படும் அழுத்தத்தை அதிகரிப்பதற்கு அதில் 20 கிலோ வுக்குவும் அதிகமாக பயன்படுத்த வேண்டும்.

சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட குழுவினர் தாங்கள் பயணிக்கும் போது பையினுள் இலகுவாக குண்டுகளை கொண்டு செல்வத ற்குக் காரணம் இந்த அதி சக்தி வாய்ந்த இரசாயனம் சேர்க்கப்பட் டமையே என பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்த அதிக சக்தி வாய்ந்த இராசாயனத்தைப் பயன்படுத் திய மையினாலேயே நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய தேவாலயத்தி லும், கொழும்பு ஷங்ரிலா ஹோட்ட லிலும் அதிக பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்படுகின் றது.

தற்போது இந்த இரசாயன பொருளை சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பினர் மாத்திரமே பயன்படுத்துவதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## குண்டு வெடிப்பால் சீர்குலைந்த சுற்றுலாத்துறை

# படை அதிகாரிகளைக் கொண்டு வெளிநாடுகளின் பயண எச்சரிக்கைகளை நீக்க அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் செய் வதை தவிர்க்குமாறு வெளிநாடு கள் பல விடுத்துள்ள பயண எச்சரிக் கைகளை நீக்குவதற்காக இல ங்கை பாதுகாப்பு அதிகாரிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் தீவிர பரப்புரைகளில் இறங்கியுள்ளது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் களை அடுத்து, இலங்கைக்குப் பயணம் செய்வதை தவிர்க்குமாறு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளால், 37 பயண எச்சரிக் கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

குண்டுவெடிப்புகளை அடுத்து இலங்கை வரும் சுற்றுலாப் பய ணிகளின் எண்ணிக்கை கடு மையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில், மீண்டும் சுற்றுலாத் துறையை தூக்கி நிறுத் துவதற்கு அரசாங்கம் பெரும் பிரயத்தனம் எடுத்து வருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகலைச் சந்தித்து, பயண எச்சரிக்கைகளை நீக்கு மாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், அதற்குச் சரியான பதில் கிடைக்காத நிலையில், வெளி நாட்டு தூதுவர்களைத் திருப்திப்ப டுத்தும் முயற்சிகளில் அரசாங்கம் இராணுவ அதிகாரிகளையும், பாது காப்பு அதிகாரிகளையும் கள மிறக்கியுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிக ளைச் சந்தித்து, நாட்டின் பாதுகா ப்பு நிலைமைகளின் முன்னேற் றம் ஏற்பட்டுள்ளது என்று நம்ப வைக்கும் முயற்சிகளில் இரா ணுவ அதிகாரிகள் களமிறக்கப் பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிர தானி, அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன, நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அனைத்து வெளி நாட்டுத் தூதரகங்களின் பாதுகா ப்பு ஆலோசகர்களைச் சந்தித்து- நாட்டின் தற்போதைய நிலைமை கள் குறித்து தெளிவுபடுத்தினார்.

அத்துடன், ஒவ்வொரு நாட் டின் தூதரகத்துடனும் தனிப்பட்ட முறையிலும் இதுபோன்ற கலந் துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளன என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் மற் றும் இராணுவப் புலனாய்வு அதி காரி உள்ளிட்டவர்கள் ஜேர்மனி தூதுவரைச் சந்தித்து பிந்திய பாது காப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கிக் கூறியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது இரா ணுவப் புலனாய்வு அதிகாரி, ஜேர் மனி தூதுவரிடம் அறிக்கை ஒன் றையும் சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது, தற்போது பாது காப்பு நிலைமைகளில் முன்னே ற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை ஜேர் மனி தூதுவர் ஏற்றுக் கொண்டு ள்ளார். எனினும் பயண எச்சரிக் கையை நீக்குவதற்கு சில படிமுறை களைக் கடந்து செல்ல வேண்டியி ருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் பிரான்ஸ் தூதுவரையும் சந்தித்துள்ளனர். எதிர்கால பாதுகாப்புக்கு எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவரும் திருப்தி வெளியிட்டுள் ளார். எனினும் சில நாட்கள் காத் திருந்த பின்னரே, பயண எச்சரி க்கைகளில் திருத்தங்களைச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

சீனத் தூதுவரையும் தாம் விரை வில் சந்திக்கவுள்ளதாக அமைச் சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நீர் உண்மையாகவே இஸ்லாத்தை காப்பவரா?

## கிழக்கில் துண்டுப்பிரசுரம்




(ஏறாவூர்)

'நீர் உண்மையாகவே இஸ் லாம் மதத்தைக் காப்பவரா?, நீங்களும் தூய இறைவனின் அடியாரா?' ஆகிய இருவேறு தலைப்புக்களில் அமைந்த இரு வகையான துண்டுப் பிரசுரங் கள் கிழக்கில் விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்களை விழிப்பூட்டு வதற்காக இவ்வாறான துண்டுப் பிரசுரங்களை படையினர் விநி யோகித்து வருகின்றனர். இந்த நடவடிக்கை நேற்று ஞாயிற் றுக்கிழமை முன்னெடுக்கப்ப ட்டது.

புனித அல் குர்ஆனிலுள்ள வசனங்களை மேற்கோள்காட்டி இந்தத் துண்டுப் பிரசுரங்களில் விழிப்புணர்வூட்டும் வாசகங் கள் எழுதப்பட்டுள்ளன.

'நீர் உண்மையாகவே இஸ் லாம் மதத்தைக் காப்பவரா?' என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ள பிரசுரத்தில், 'இனம், மதம், மொழி எதுவாக இருந்தாலும், வாழ்வத ற்கு அனைத்து மனிதர்களுக் கும் உரிமை உண்டு. அதனை அழிப்பது பாவமாகும்' என்ற வாசகம் உள்ளிட்ட பல வாசக ங்கள் எழுதப்பட்டுள்ளன. (இ-7)

# மட்டக்களப்பிலிருந்து கடல் மார்க்கமாக ஆஸி செல்வதற்கு 16 பேர் முயற்சி



## பொலிஸாரால் மூவர் கைது

(சவுக்கடி)

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் தப்பிச் செல்ல முற்பட்ட 3 பேர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு சவுக்கடி கடற்கரை பகுதியில் இனந் தெரியாதவர்களின் நடமாட்டத்தை அவதானித்த மீன வர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்போது 16 பேர் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். இதனை யடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர். அத்தோடு ஏனைய 13 பேரும் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த இருவரும் வந்தாறுமூலையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர். குறித்த மூவரும் பயணப் பொருட்களுடன் கைது செய்யப்பட் டுள்ளதுடன், அவர்களை ஏற்றி வந்த தாகக் கருதப்படும் ஆட்டோ ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தப்பிச் சென்ற சந்தேகநபர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)




# கிண்ணத்தை கோட்டைவிட்டது சென்னை

## இறுதிப் பந்தில் அதிர்ச்சி தோல்வி



**4ஆவது முறை**

இறுதிப்போட்டியில் சென்னை அணியை வீழ்த்திய மும்பை அணி, ஐ.பி.எல்., அரங்கில் 4வது முறையாக (2013, 2015, 2017, 2019) சம்பியன் பட்டத்தை கைப் பற்றியது. இதன்மூலம் அதிக முறை கிண்ணம் வென்ற அணிகளுக்கான பட்டியலில் சென்னையை (2010, 2011, 2018) முந்தி முதலிடம் பிடித்தது. கொல் கத்தா 2 (2012, 2014), ராஜஸ்தான் (2008), டெக்கான் (2009), ஹைதராபாத் (2016) தலா ஒரு முறை கிண்ணம் வென்றன.

◈ இந்த சீசனில் சென்னை அணி, 2 லீக், ஒரு 'பிளே-ஓப்' (தகுதிச் சுற்று 1), ஒரு இறுதிப் போட்டி என, 4 போட்டிகளில் மும்பை அணியிடம் வீழ்ந்தது.

ஐ.பி.எல்., தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டியில் கடைசி பந்தில் தடுமாறிய சென்னை அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி அடைந்து, கிண்ணம் வெல்லும் வாய்ப்பை கோட்டைவிட்டது. மும்பை அணி, நான்காவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்தியாவில், 12ஆவது ஐ.பி.எல்., கிரிக் கெட் தொடர் நடந்தது. ஹைதராபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் 'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்கிய சென்னை அணி, மும்பை அணியை எதிர்கொண்டது. மும்பை அணியில் ஜெயந்த் யாதவ் நீக்கப்பட்டு மிட்சல் மெக்லீனகன் சேர்க்கப்பட்டார். சென்னை அணியில் மாற்றம் எதுவும் செய்ய வில்லை.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ரோகித் சர்மா, 'களத் தடுப்பை' தேர்வு செய்தார்.

**நல்ல ஆரம்பம்**

மும்பை அணிக்கு ரோகித் சர்மா, குயின்ரன் டி கொக் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஷர்துல் தாகூர் வீசிய 2வது ஓவரில் ஒரு சிக்சர் அடித்த ரோகித், ஹர்பஜன் பந்தை பவுண்டரிக்கு அனுப்பினார். மறு முனையில் ஒத்துழைப்பு தந்த குயின்டன், தீபக் சகார் வீசிய 3வது ஓவரில் 3 சிக்சர் விளாசினார். முதல் விக்கெட்டுக்கு 45 ஓட்டங்கள் சேர்த்த போது ஷர்துல் 'வேகத்தில்' குயின்ரன் (29) வெளியேறினார். தீபக் சகார் பந்தில் ரோகித் (15) ஆட்டமிழந்தார்.

பின் இணைந்த சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷான் நிதானமாக ரன் சேர்த்தனர். டுவைன் பிராவோ வீசிய 10வது ஓவரில் இஷான் கிஷான் 2 பவுண்டரி அடிக்க, 12 ஓட்டங்கள் கிடைத்தது. ஹர்பஜன் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய சூர்யகுமார் (15), இம்ரான் தாகிர் 'சுழலில்' போல்டானார். ஷர்துல் தாகூர் பந்தில் குர்னால் பாண்ட்யா (7) 'பெவிலியன்' திரும்பினார்.

**பொலார்ட் ஆறுதல்**

தாகிர் வீசிய 15வது ஓவரின் முதல் பந்தில் பொலார்ட் ஒரு சிக்சர் அடிக்க, மும்பை அணி 100 ஓட்டங்களை எட்டியது. இந்த ஓவரின் 4வது பந்தில் இஷான் கிஷான் (23) ஆட்டமிழந்தார். ஜடேஜா பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய பொலார்ட், தாகிர், ஷர்துல் ஓவரில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார். பின் எழுச்சி கண்ட ஹர்திக் பாண்ட்யா, ஷர்துல் பந்தில் ஒரு சிக்சர் விளாசினார். தீபக் சகார் வீசிய 19வது ஓவரில் ஹர்திக் (16), ராகுல் சகார் (0) அவுட்டாகினர். மெக்லீனகன் (0) 'ரன்-அவுட்' ஆனார். பிராவோ வீசிய கடைசி ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் அடித்தார் பொலார்ட்.

20 ஓவர்களில் மும்பை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களை எடுத்தது. பொலார்ட் (41), பும்ரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை அணி சார்பில் தீபக் சகார் 3, ஷர்துல் தாகூர், இம்ரான் தாகிர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டியசென்னை அணிக்கு டு பிளசி, வோட்சன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. குர்னால் பாண்ட்யா வீசிய 4வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய டுபிளசி (26), அதே ஓவரில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் எழுச்சி கண்ட வோட்சன், மலிங்க வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் பறக்கவிட்டார். ராகுல் சகார் 'சுழலில்' ரெய்னா (8) சிக்கினார். பும்ரா 'வேகத்தில்' அம்பதி ராயுடு (1) வெளியேறினார். தேவையில்லாமல் 2வது ஓட்டத்துக்கு ஓடிய கேப்டன் தோனி (2) 'ரன் - அவுட்' ஆனார்.

மலிங்க வீசிய 16வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்த வோட்சன், ஐ.பி.எல்., அரங்கில் தனது 19வது அரைசதமடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், குர்னால் பாண்ட்யா வீசிய 18வது ஓவரில் 'ஹட்ரிக்' சிக்சர் பறக்கவிட்டார். பும்ரா 'வேகத்தில்' டுவைன் பிராவோ (15) ஆட்டமிழந்தார்.

**அதிர்ச்சி தோல்வி**

கடைசி ஓவரில் சென்னையின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. மலிங்க வீசிய கடைசி ஓவரின் முதல் 3 பந்தில், 4 ஓட்டங்கள் கிடைத்தது. நான்காவது பந்தில் 2வது ரன்னுக்கு ஓடிய வோட்சன் (80) 'ரன்-அவுட்' ஆனார். ஐந்தாவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்த ஷர்துல் தாகூர் (2), கடைசி பந்தில் எல்.பி.டபிள்யூ., முறையில் ஆட்டமிழக்க மும்பையின் வெற்றி உறுதியானது.

சென்னை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஜடேஜா (5) ஆட்டமிழக்காமல் இருந்தார். மும்பை அணி சார்பில் பும்ரா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பையின் பும்ராவும் தொடரின் நாயகனாக கொல்கத்தாவின் ரசலும் தெரிவாகினர்

**சிவப்பு கம்பள வரவேற்பு**

ஐ.பி.எல்., தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடிய சென்னை, மும்பை அணி வீரர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

**சுப்பர் கீப்பர்**

மும்பையின் குயின்ரன் டி கொக், ரோகித் சர்மா அடித்த பந்தை 'பிடி' எடுத்த சென்னை அணி அணித் தலைவர் தோனி, ஐ.பி.எல்., அரங்கில் அதிக விக்கெட் வீழ்ச்சிக்கு வித்திட்ட விக்கெட் காப்பாளர்கள் பட்டியலில் கொல்கத்தாவின் தினேஷ் கார்த்திக்கை (131) முந்தி முதலிடம் பிடித்தார். இவர், 190 போட்டியில், 132 விக்கெட்டுக்கள் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளார். இதில் 94 'பிடி', 38 'ஸ்டெம்பிங்' அடங்கும்.





# நம்பிக்கை நாயகன் பொன்ரிங்

அவுஸ்திரேலிய அணியின் அசைக்க முடியாத நட்சத்திரமாக ஜொலித் தார் ரிக்கி பொன்ரிங். 2001ல் தலைமை பதவியில் இருந்து ஸ்ரீவ் வோ நீக்கப் பட, புதிய அணித் தலைவராக கில் கிறிஸ்டை நியமிக்க வாய்ப்பு இருந்தது. ஆனால், சற்றும் எதிர்பாராத வகையில் அணித் தலைவராக பொன்ரிங் நியமிக்கப்பட்டார். தன் மீது தேர்வாளர்கள் வைத்த நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் 2003ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் தூள் கிளப்பினார் பொன்ரிங். இலங்கைக்கு எதிரான 'சுப்பர் 6' போட்டியில் சதம் (114 ஓட்.,) கடந்து வெற்றி தேடிக் கொடுத்தார். பின் இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் விஸ்வரூபம் எடுத்தார். 138 பந்துகளில், 140 ஓட்டங்கள் (8 சிக்சர், 4 பவுண்டரி) விளாசிய இவர், அவுஸ்திரேலிய அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தார். கடந்த 2007ல் மீண்டும் கிண்ணம் வென்று காட்டினார். இந்தியாவில் 2011ல் நடந்த தொடரில் இவரால் சோபிக்க முடியவில்லை. கடந்த 2012ல் ஓய்வு பெற்றார்.

ஐந்து முறை (1996, 1999, 2003, 2007, 2011) உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்றுள்ள பொன்ரிங், 46 போட்டியில், 5 சதம், 6 அரைசதம் உட்பட 1,743 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன்மூலம் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

கடந்த 2008ல் அறிமுகமான ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடிய இவர், 2013ல் மும்பை அணியின் தலைவராக செயற்பட்டார். கடந்த ஆண்டு ஐ.சி.சி., 'ஹோல் ஒப் பேம்' பட்டியலில் சேர்க்கப்பட்ட இவர், தற்போது அவுஸ்திரேலிய அணியின் துணை பயிற்சியாளராகவும், ஐ.பி.எல்., தொடரின் டில்லி அணியின் தலைமை பயிற்சியாளராகவும் உள்ளார்.



**வெற்றித் தலைவர்**

உலக கிண்ண அரங்கில் 29 போட்டிகளுக்கு அணித் தலைவராகச் செயற்பட்ட அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்ரிங், 26 வெற்றி, 2 தோல்வியை பெற்றுக் கொடுத்துள்ளார். ஒரு போட்டிக்கு முடிவு இல்லை. இதன்மூலம் உலக கிண்ண வரலாற்றில் அதிக போட்டிகளுக்கு தலைவராக செயற்பட்ட வீரர் மற்றும் அதிக வெற்றி தேடிக் கொடுத்த அணித் தலைவர் என்ற பெருமை பெற்றார்.

இவரை அடுத்து நியூசிலாந்தின் ஸ்ரீபன் பிளமிங் (27 போட்டி, 16 வெற்றி, 10 தோல்வி, ஒரு முடிவு இல்லை) உள்ளார்.

## வாக்காளர் பெயர்ப்பட்டியல்

# விண்ணப்பப்படிவங்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2019ஆம் ஆண்டு வாக்கா ளர் பெயர்ப் பட்டியல் திருத்தத்தி ற்கு அமைவான விண்ணப்பப்படி வங்களை வீடுகளுக்கு விநியோ கிக்கும் பணிகள் ஆரம்பமாக வுள்ளன.

அதன்படி நாளை மறுதினம் 15ஆம் திகதி முதல் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள் ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இதற்கமைய கிராம உத்தி யோகத்தர்கள் ஊடாக இந்த விண்ணப்பப்படிவங்களை கைய ளிக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளதுடன் பூர்த்தி செய்ய ப்பட்ட விண்ணப் பப்படிவங்களை ஜூன் மாதம் 2 ஆம் திகதி முதல் மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ள தாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை வாக்காளர் ஒருவரின் பெயர் கடந்த ஆண்டு இடம்பெற்றிருந்த காரணத்தி னால். அடுத்த ஆண்டிலும் அவ ரின் பெயர் அந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படமாட்டாது என வும் எனவே. 2019 ஆம் ஆண் டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டிய லில் தமது பெயர்களை உள்ள டக்குவதற்காக, வாக்காளர்கள் குறித்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து கிராம உத்தியோ கத்தரிடம் கையளிக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார். (7)


## கைகொடுக்கும் நண்பர்கள்

மனதில் சுமையா? உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் உங்கள் துயரங்களையும் துன்பங்களையும் செவிமடுக்க நாங்கள் இருக்கிறோம். இரகசியம் பேணப்படும். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

கைகொடுக்கும் நண்பர்கள்.
175, நாவலர் வீதி.
077 900 8776.

ஸ்ரீலங்கா சுமித்திரையோ (C-6302)


# மரண அறிவித்தல்

## திருமதி.இராசதுரை குண்டுமணிதேவி



பிறப்பு: 09.12.1945

இறப்பு: 08.05.2019

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கு, இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இராசதுரை குண்டுமணிதேவி அவர்கள் கடந்த (08.05.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பாக்கியம் தம்பதி யரின் அன்பு மகளும், இராசையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் இராசதுரை (ஓய்வுபெற்ற காசாளர்-வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திவாகரமூர்த்தி, ஸ்ரீகரன் மற்றும் கலைச்செல்வி (செல்வி-சுவிஸ்), கருணாகரன் (செல்வா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரஞ்சனி, அகிலானந்தன் (அகி- கனடா), மகேந்திரன், ஜனார்த்தனன் (ஜனா-சுவிஸ்) ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும், கருணைவேல், பத்மாவதி, வேதேஸ்வரன், அனுஜா, சஞ்ஜீவனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற வர்களான பாலசுந்தரம், நவரத்தினம், ஞானலிங்கம், இரத்தின சிங்கம், தவமணிதேவி மற்றும் நீலமணிதேவி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சொர்ணமலர், அன்னலட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, இந்திராதேவி, தர்மராசா, கலாநிதி, பத்மநாதன், அற்புதநிதி, லிங்கேஸ்வரன், காலஞ்சென்றவர்களான இராசமணி, தியாக ராசா, இரங்கநாதன் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஹானா, சஹீரன், திவானா, திவியன், கவிரா, கிருஷ்ணவி, ஐந்துயா, தயன், குணாளன், அஜந்தன், அவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராசவீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர். தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: இராசதுரை-கணவர் :+94212058410, செல்வி-மகள் :+41315583625, செல்வா-மகன் :+33143053034, அகி:+16136974389, ஜனா :+41791387178, 0761445055

(8744)

## இராசி பலன்

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிவரும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | சுக், சூரி | புத | ராகு, செவ் |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் | | |
| | | | சந் |
| சனி, குரு, கேது | | | |

13.05.2019
சித்திரை 30, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு,
நவமி பிற்பகல் 2.19 மணிவரை
மகம் முற்பகல் 9.36 மணிவரை
சுபநேரம் 11.54-1.24 மணிவரை
இராகுகாலம் 7.24-8.54 மணிவரை

வளவன்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரியோர் சந்திப்புண்டு.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், சாதுர்யமாக பேசி காரியம் சாதிக்க வேண்டியநாள்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**துலாம்:** செல்ல நிலை உயரும் நாள், பயணங்கள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

# மாணவர்களின் கல்வி சிறையிலா? யாழ்.பல்கலையில் பதாகைகள்






(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலை ஊழியரின் கைது நடவடிக்கையை எதிர்த்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக் கழகத்தை சுற்றி நேற்று பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டின் பாதுகாப்புக் கருதி அவசர காலச் சட்டம் அமுலுக்கு வந்தது.

குறித்த தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் கடந்த 3 ஆம் திகதி யாழ்.பல்கலைக் கழகத்திற்குள் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருடைய புகைப்படம் இருந்ததாகத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்திருந்தனர்.

அன்றையதினம் பல்கலைக் கழகச் சிற்றுண்டிச்சாலையில் தியாகி திலீபனுடைய புகைப்படம் இருந்ததாகத் தெரிவித்து அங்கு பணியில் இருந்த சிற்றுண்டிச் சாலை உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர். குறித்த கைது நடவடிக்கை அரசின் திட்டமிட்ட செயல் என்றும் மாணவர்களின் எதிர்காலத்தை சிதைத்து தமிழினத்தின் குரலை அடியோடு நசுக்கும் செயல் எனத் தெரிவித்து பலர் தமது எதிர்ப்பை தெரிவித்து வருவதுடன் அவர்களுடைய விடுதலையையும் வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் மாணவர்களை விடுவிப்பதற்காக பல்கலைச்சமூகத்தினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்கலைச் சூழலில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் "வீணே சிறையிருக்கும் எம் மாணவர்களையும் சிற்றுண்டிச்சாலை நடத்துநரையும் விடுதலை செய்து நாட்கள் விரயமாகாமல் கல்வி நடவடிக்கைகள் தொடங்க ஆவன செய்க!. விரைந்து சிறைக்கதவுகள் திறக்கட்டும். வீணே மூடிக்கிடக்கும் எங்கள் பல்கலைக்கழகத்தின் கதவுகளும் திறக்கட்டும், காக்கவென வந்த சட்டங்கள் அப்பாவிகளுக்கெதிரானது ஏன்?, மாணவர்களின் கல்வி சிறையிலா"? என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# "சுகவிழி" ஏடு வெளியீடு



பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கல்வி வெளியீட்டுப் பிரிவால் "சுகவிழி" எனும் பொதுச் சுகாதார மேம்பாட்டு ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் அதன் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இவ் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் ரொனால்ட்டால் எழுதப்பட்ட "சுகவிழி" எனும் ஏட்டை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன் வெளியிட்டு வைக்க ரி.சத்தியமூர்த்தி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

சிறப்புப் பிரதியை வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் பெற்றுக் கொண்டார். (இ-60)

# நாளை நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நடமாடும் சேவை - 2019 வட்டாரம் - 02 கிராம உத்தியோகத்தர் பிரிவில் (சுன்னாகம் தெற்கு - ஜே/196) முத்தமிழ் மன்றத்தில் நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும்.

இதில்,

1.வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய வீடுகள், கடைகள், காணிகள் உட்பட ஒவ்வொரு ஆதனமும் பிரதேசசபை ஆதனப்பதிவேட்டில் தங்களது பெயரில் பதியப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

2.ஆதனப்பதிவேட்டில் தங்களது பெயரில் தங்களது ஆதனம் இல்லாமல் இருந்தால் தங்களுடைய பெயருக்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்துகொள்வதெப்படி என்பது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

3.தங்களது ஆதனம் வேறு ஒருவரது பெயரில் இருந்தால் அதற்கு பிரதேசசபை பொறுப்பாகமாட்டாது என்பதுடன் தங்களுடைய பெயருக்கு மாற்றுவதற்காக குறிப்பிட்ட ஆதனம் தங்களுடையது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தால் ஆதனப் பதிவேட்டில் அதனை தங்களது பெயருக்கு மாற்றுவது தொடர்பான ஆலோசனைகளைப் பெறமுடியும்.

4.வியாபார உரிமம் பெறுவது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

5.தங்கள் ஆதனங்களுக்குரிய ஆதனவரியை (சோலைவரி) செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

6.சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவராக சேர்ந்து கொள்ள முடியும்.

7.பிரதேச சபையால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற முடியும் என வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தர்சன் அறிவித்துள்ளார். (இ)

# ஒப்பந்தகாரர்கள் பதியவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய நிர்மாணிகள் நிறுவனத்தின் வடமாகாணக் கிளையின் (NCASL, Northern Branch) அங்கத்தவர்களாகவுள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த நிர்மாணத் துறை ஒப்பந்தகாரர்கள் 2019/2020 ஆம் வருடத்திற்கான உங்களது அங்கத்துவத்தை உரிய சந்தாப்பணத்தை செலுத்தி புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிறுவனத்தின் எதிர்காலச் செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அங்கத்தவர்களது நிறைந்த ஒத்துழைப்பும் அதிகளவான அங்கத்துவ தேவைப்பாடும் அவசியமாகும்.

மேலும் அங்கத்தவர் நலன் கருதிய வருங்கால திட்டங்களை முன்னெடுப்பதற்கு அங்கத்தவர்கள் அனைவரதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதுடன் அங்கத்துவம் பெறாத வடமாகாணத்தைச் சேர்ந்த ஏனைய நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர்களையும் நிறுவனத்தில் அங்கத்தவர்களாக இணைவதற்கு வரவேற்கின்றோம்.

மேலும் எதிர்வரும் 18.06.2019 ஆம் திகதிக்கு முன்பாக உங்களது சந்தாப்பணத்தைச் செலுத்தி இவ்வருட இறுதியில் நடத்தப்படவுள்ள 2019 ஆம் வருட வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு அங்கத்துவ தகுதியை உறுதிப்படுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 2217567 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது இல. 54, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது அலுவலகத்தில் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும் என நிர்வாக உத்தியோகத்தர் ஆ. விமல்ராஜ் அறிவித்துள்ளார். (இ)

# வீதிப் புனரமைப்பு ஆரம்பம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி தொகுதிக்கான கம்பரெலிய வேலைத்திட்டங்கள் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய வீதிப் புனரமைப்புப் பணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரோடு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், உதவிப்பிரதேச செயலர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி மக்களும் இணைந்து வீதிப்புனரமைப்புப் பணிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (இ-89)

## பொஸ்கோவுக்கு அருகிலுள்ள தேவாலயத்தில்

# முகத்தை மூடியவாறு நடமாடிய நபரைத்தேடி யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள தேவாலயத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் நடமாடியதாக தெரிவித்து யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி அதிகாலை குறித்த நபர் முகத்தை மூடியவாறு அப்பகுதியில் நடமாடியுள்ளார் எனத் தெரிவித்து நேற்று பொலிஸ் நிலையத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதிக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் அப்பகுதியில் இருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகிய காட்சிகளையும் பெற்றுச்சென்றுள்ளனர்.

குறித்த பகுதியில் நடமாடிய நபர் முகத்தை மூடியிருந்துள்ளதால் அடையாளம் காணமுடியவில்லை என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

# கேள்வி அறிவித்தல்

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)-2019

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.09.2016 ஆம் திகதிய 04/2016 (i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதிப் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி: 021 222 2654, தொலைநகல்: 021 222 3410, மின்னஞ்சல்: raclgjaffna@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப. 14.00 மணிவரை 27.05.2019 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 13.05.2019 ஆம் திகதியிலிருந்து 27.05.2019 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 27.05.2019 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு-13.08.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விகள் தொடர்பாக இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(1)/ PL2/PSDG/ CHPS/01/2019 | கரன் வீதி புனரமைப்பு, (கொங்கிறீட் வீதி) இயற்றாலை வரணி | 8.64 | 03 மாதங்கள் | C 7 (வீதி) | 86,400.00 | 08.09.2019 |
| NP/14/41(1)/ PL2/PSDG/ KPS/01/2019 | காளி கோயில் முன் வீதி புனரமைப்பு கரம்பொன் கிழக்கு | 5.10 | 03 மாதங்கள் | C 7 (வீதி) | 51,000.00 | 08.09.2019 |
| NP/14/41(1)/ PL2/PSDG/ VPS/01/2019 | சிற்பனை வீதி புனரமைப்பு வேலணை | 6.12 | 03 மாதங்கள் | C 7 (வீதி) | 61,200.00 | 08.09.2019 |

1) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 20.05.2019 அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13.05.2019

(C-6363)


# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி
## நவீனமலர் சந்திரபோஸ்

10.05.2019 அன்று தனது அறுபதாவது அகவையில் மணிவிழாக் கண்ட எமது வித்தியாலயத்தினுடைய பிரதி அதிபர் திருமதி. நவீனமலர் சந்திரபோஸ் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் தனது வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய
ஆரம்ப வித்தியாலயம் கிளிநொச்சி.

(C-6362)

பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (சுவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின்விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# போலிக் கச்சேரி சுற்றிவளைப்பு ஆவணங்களுடன் ஒருவர் கைது

(பண்டாரவளை)

பண்டாரவளை பிரதேசத்தில் போலி கச்சேரியொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் போலி சான்றிதழ்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸ் போக்குவரத்து பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது போலி சான்றிதழ்கள்; பல நிறுவனங்களுக்கு உரித்தான இறப்பர் முத்திரைகள் மற்றும் போலியாக தயாரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளிட்ட பல போலி ஆவணங்களையும் அவற்றை தயாரிக்க பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசியல் மயப்படுத்த வேண்டாம்

## வாசுதேவ எம்.பி. அறிவுரை

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளாமல் பாதிக்கப்பட்ட மக்களின் உறவுகளின் உணர்வுக்கு மதிப்பளித்து அனுஷ்டித்துக் கொள்ள வேண்டும் என மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பில் கடந்த காலங்களில் ரணில் அரசாங்கம் எவ்வித ஏற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்களைக் கண்காணிப்பதற்கு முழுமையான நேரத்தை செலவிட்டது. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஆரம்பத்தில் இருந்து எழுந்த சாதாரண விடயங்களையும் பொருட்படுத்தாமல் செயற்பட்டதன் விளைவே இன்று பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தற்கொலைதாரிகளை ஐ.எஸ்.பயங்கரவாதிகள் மூளைச்சலவை செய்யும் வழிமுறை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தாக்குதல் மேற்கொண்ட தற்கொலைதாரிகளுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு எவ்வாறு மூளைச்சலவை செய்தது என்பது தொடர்பில் புலனாய்வு அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மிகவும் நுட்பமான முறையில் தனித்தனியான குடும்பங்களைத் தெரிவு செய்து இவ்வாறான மூளைச்சலவை செய்ததாக பி.பி.சி. உலக சேவைக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குடும்ப வலையமைப்பு ஒன்றின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பங்களும் தனியான அலகுகளாக செயற்பட்டதாக அந்த புலனாய்வு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குடும்ப வலையமைப்பாக செயற்பட்டதன் மூலமே பயங்கரவாதக் குழு தமது நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளைத் தங்களுக்குள் மட்டும் வைத்துக் கொண்டு இரகசியமாக செயற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தனித்தனி குடும்பங்கள் தீவிரமயமாக்கப்பட்டு அவை பின்னர் ஏனைய தீவிரமயமாக்கப்பட்ட குடும்பங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி பரந்த வலையமைப்பை உருவாக்கியுள்ளன.

பயங்கரவாதிகள் தகவல் பரிமாற்றங்களுக்கும் திட்டமிடல்களுக்கும் சமூக வலைத்தளங்களும் ஏனைய தொடர்பாடல் வசதிகளும் பயன்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறு இந்த வலையமைப்பு தொடர்பாடலை மேற்கொண்டது என்பது பற்றி தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். பயங்கரவாதக் குழுக்கள் தமது நடவடிக்கைகளுக்கு குடும்பங்களைப் பயன்படுத்திக் கொள்வது புதிய வழிமுறையாக அமைந்துள்ளது.

இந்தோனேசியாவில் தேவாலயங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் தாக்குதல் நடத்தியவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த புலனாய்வு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில் ஜனாதிபதி சீனாவுக்குப் பயணம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆசிரிய நாகரிகங்களின் உரையாடல் மாநாடு என்ற கருத்தரங்கில் பங்கேற்கவே ஜனாதிபதி இன்று திங்கட்கிழமை சீனாவுக்குச் பயணிக்கவுள்ளார். பீஜிங்கில் இந்த மாநாடு நாளை மறுதினம் 15 ஆம்



திகதி ஆரம்பமாகவுள்ளது.

சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள இந்தப் பயணத்தின் போது, நாளை செவ்வாய்க்கிழமை சீன ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பின் போது இரண்டு நாடுகளின் தலைவர்களும் தனியாக உதவியாளர்களின்றி உரையாடவுள்ளனர்.

அத்தோடு சீனப் பிரதமர் லி கெகியாங்குடனும் இவ்வாறு தனியாக உரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் நடந்த தாக்குதல்கள் மற்றும் அதனையடுத்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

47 ஆசிய நாடுகளின் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் 2000 பேர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர் எனவும் அதற்கான அதிகாரபூர்வ இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் 21ஆம் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் அது குறித்து அவர் நடவடிக்கையை மேற்கொள்ளாததோடு வெளிநாட்டுக்குப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மேலும் வெள்ளவத்தை, பஞ்சிகாவத்தை உள்ளிட்ட பல பகுதிகளில் இன்று தாக்குதல்கள் நடத்தப்படலாமென தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி சீனாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வதிவிட நுழைவிசைவுக்கு புலனாய்வுப் பிரிவின் அனுமதி அவசியம்

(கொழும்பு)

வெளிநாட்டவர்கள் இலங்கையில் வதிவிட நுழைவிசைவைப் பெற்றுக் கொள்வதற்கு, அரச புலனாய்வுச் சேவையின் அனுமதி (Clearance) அவசியம் என்ற நடைமுறையைக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது, வதிவிட நுழைவிசைவுகளை, பெற்றுக் கொள்வதற்கு உள்துறை அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் பெறப்படும் நடைமுறைக்கு மாறாக, அரச புலனாய்வுச் சேவையின் அனுமதியும் அவசியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1000 வெளிநாட்டவர்கள் இலங்கையில் நுழைவிசைவு காலாவதியான நிலையில் தங்கியிருப்பதாக கிடைத்துள்ள தகவல்களையடுத்து, குடிவரவுத் திணைக்களம் கடுமையான நுழைவிசைவு நடைமுறைகளை கடைப்பிடிக்கவுள்ளது.

அனைத்துலக பொலிஸாரின் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் உள்ளிட்டவர்கள் இலங்கையில் வதிவிட நுழைவிசைவைப் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்கே அரச புலனாய்வுச் சேவையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 20 ¼<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc QS, கட்டட பொறியியலாளர், Australia<br>எதிர்பார்ப்பு: A/L, பட்டதாரி. உள்நாடு<br>தொ.இ: B/9681 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 26 ½ சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு. விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4579 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L, Qatar<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/9682 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 8 ½<br>தகைமை/தொழில்: A/L, கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/4580 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 18 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: B.Sc, Web Developer<br>எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி, தொழில் புரிபவர், உள்நாடு<br>தொ.இ: B/9683 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 65 ¾ சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: NDES, Civil Engineering, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Bank வெளிநாடு மட்டும்.<br>தொ.இ: G/4582 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, உள்நாடு<br>தொ.இ: B/9684 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Accounting, Nursing, Australia<br>எதிர்பார்ப்பு: தகுதிக்கேற்ப. பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/4600 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சிலாபத்தில் பதற்றம் ஊரடங்குச் சட்டம் அமுல்



(சிலாபம்)

சிலாபத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவினைவாதத்தைத் தூண்டும் வகையில் முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்த ஒருவரை சுற்றிவளைத்து பிரதேச மக்கள் தாக்கியுள்ளனர். சிலாபம் ஜயபிம என்ற பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.

அத்தோடு, பிரதேசத்தில் அமைதியைப் பேணும் வகையில் இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ உதவிகளை நிறுத்தியது பெரிய தவறு

## முன்னாள் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டுப் போரின் முடிவிற்குப் பிறகு இலங்கையுடனான இராணுவ உறவுகளை ஒபாமா நிர்வாகம் துண்டித்துக் கொண்டது ஒரு தவறாகும் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரும், ஒபாமா நிர்வாகத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க அமைச்சருமான ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் பெருமளவில் மனித உரிமை மீறல்கள் இழைக்கப்பட்டன என்ற முறைப்பாட்டை அடுத்தே இலங்கையுடனான உறவுகளை அமெரிக்கா துண்டித்துக்கொண்டது என்றும் தெரிவித்தார்.

"போரின் இறுதிக்கட்டங்களில், குறிப்பாக 2008-2009 பகுதியில் மனித உரிமைகள் பற்றிய அக்கறைகள் இலங்கை இராணுவத்துடனும், கடற்படையுடனுமான எமது இராணுவ ஒத்திகைகளை, பயிற்சிகளை, உதவிகளைப் பெரும்பாலும் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தியது. விடுதலைப் புலிகள் கப்பல் மூலமாக ஆயுதங்களைக் கொண்டு வருவதை முறியடிப்பதற்கு இலங்கைக்கு உதவுவது அமெரிக்காவின் நலன்களுக்குச் சாதகமானது என்று வாதிட்டு இலங்கைக் கடற்படைக்கும், எமது கடற்படைக்கும் இடையிலான ஒத்துழைப்பை கடுமையான முயற்சிகளின் விளைவாக ஒரு சிறிய அளவிலேனும் தொடர்ந்து பேணுவதற்கு என்னால் இயலுமாக இருந்தது.

இன்று அந்தக் கட்டுப்பாடுகள் இல்லை என்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது" என்றும் பிளேக் தெரிவித்தார். (இ-7)


சிவமயம்



# வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## ஆலய வருடாந்த பொங்கல் விழா

**அம்பிகை அடியார்களே!**

வன்னிவிளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் விகாரி வருஷம் வைகாசித் திங்கள் 03ம் நாள் (17.05.2019) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 09.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவை சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம்வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**

1) பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2) விசேட பாதுகாப்பு வசதிகள், ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3) அடியவர்கள் தேவையற்ற வகையில் பொதிகள் மற்றும் பொருட்களை எடுத்து வருவதைத் தவிர்க்கவும்.
4) பொங்கல் தினத்தன்று பின்வரும் வர்த்தக நடவடிக்கைகள் மட்டுமே ஆலய வளாகத்தில் அனுமதிக்கப்படும்.
- தேநீர் கடைகள் (துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட வர்த்தகர்கள், பொதுமக்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்).
- கச்சான் மற்றும் இனிப்புப் பண்ட விற்பனை நிலையங்கள் மட்டும்.
- நடமாடும் குளிர்பான விற்பனை ஊர்திகள் மற்றும் துவிச்சக்கரவண்டி விற்பனை மட்டும்

.மணிக்கடை உட்பட ஏனைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

5) பறவைக்காவடி, தூக்குக் காவடி என்பவற்றுக்கான அனுமதிகள் இம்முறை வழங்கப்படமாட்டாது.
6) பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல் - தொடர்புகளுக்கு 077 889 6796
- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

மேலதிக தகவல் பெற விரும்பினால் தொடர்புகளுக்கு 077 595 6909 தலைவர் - பொருளாளர்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

(C-13385)

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை, வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உதவி



மாங்குளத்தில் வீசிய சுழல் காற்றினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அனர்த்த பதிலிறுப்புக் குழு உதவுகளை வழங்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வீசிய கடும் காற்று காரணமாக 22 வீடுகள் சேதமடைந்திருந்தன.

சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்ற இலங்கை செஞ்சிலுவை சங்க அனர்த்த பதிலிறுப்புக்குழு, அனர்த்த முகாமைத்துவப்பிரிவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அலுவலர்கள் ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பீடு செய்ததுடன் பாதிக்கபட்ட குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டன. (9-281)




# தமிழ் இனப் படுகொலை 10 ஆம் ஆண்டு நினைவு வாரம்

## முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்று ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழ் இனப்படுகொலை 10 ஆவது ஆண்டு நினைவு வாரம் நேற்று முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கப்பலடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான உறவுகள் உயிரிழந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப் படுகொலை நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நினைவு வார ஆரம்ப நிகழ்வுகள் முன்னாள் மாகாண சபை உறுப்பின் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் கப்பலடியில் சுடர் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இலங்கை ஆயுதப் படைகளினால் இனப்படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் இனப் படுகொலையின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 18.5.2019 தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கும் போர்க்குற்றங்களுக்கும் நீதி வேண்டும், கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களைப் பற்றி விசாரணை செய், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய், ஆயுதப் படைகளே எமது காணிகளை விட்டு வெளியேறு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப் பெறு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையே இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் ஒரு பொதுசன வாக்கெடுப்பு நடத்து" உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தமிழ் இனப்படுகொலை நினைவு வாரம் மே 12 முதல் மே 18 ஆம் திகதி வரை மேற்குறித்த கோரிக்கைகளை முன்வைத்து அனுஷ்டிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (9-281)

## கடிதம் மூலம் வெடிகுண்டு மிரட்டல்

# வவு.நகர் முழுவதும் இராணுவத்தினர் குவிப்பு

❖ கடும் சோதனை நடவடிக்கை ❖ விசாரணைகளை துரிதப்படுத்திய பொலிஸார்





வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலை மற்றும் மதீனாநகர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஆகியவற்றுக்கு கடிதம் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதனையடுத்து நேற்றுக் காலை முதல் வவுனியா நகர் முழுவதும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள வீதி மற்றும் வைத்தியசாலையினை சூழவுள்ள வீதி அனைத்தும் மூடப்பட்டதுடன் வாகனங்கள் உட்செல்ல தடையும் விதிக்கப்பட்டது. மேலும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பாதுகாப்புக் கடமையில் வழமையினை விட அதிகளவிலான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இராணுவத்தினரால் புதிதாக ஓர் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு வவுனியா நகரினுள் உட்செல்லும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், வவுனியா,மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பாதையின் இரு பகுதியிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வவுனியா நகரினுள் உட்செல்லும் மற்றும் வெளிச் செல்லும் வாகனங்கள் சோதனைக்குட் படுத்தப்பட்டன.

மேலும், வவுனியா மின்சாரசபை வீதி, பூங்கா வீதி, உள்வட்ட வீதி, சிந்தாமணி பிள்ளையார் ஆலய வீதி, சிங்கள பிரதேச செயலக வீதி என்பவற்றில் இராணுவம் குவிக்கப்பட்டு உட்செல்லும் வெளிச் செல்லும் வாகனங்கள் சோதனைக்குட் படுத்தபட்டதுடன் ஆள் அடையாள அட்டைகளையும் பாதுகாப்புத் தரப்பினர் பார்வையிட்டனர்.

அத்துடன் வவுனியா புதிய பேருந்து நிலையத்தினுள் செல்லும் அனைத்து பயணிகளினதும் பொதிகளை பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் சோதனைக்குட்படுத்திய பின்னரே பேருந்து நிலையத்தினுள் உட்செல்ல அனுமதியளித்திருந்தனர்.

வவுனியா நகரினுள் தேவையற்ற விடயத்திற்கு செல்ல வேண்டாமெனவும் தேவை நிமித்தம் வவுனியா நகரினுள் செல்லும் சமயத்தில் அடையாள அட்டையினை எடுத்துச்செல்லுமாறு பொதுமக்களிடம் இராணுவத்தினர் வேண்டுகோள் விடுத்தனர்.

வவுனியா வைத்தியசாலை மற்றும் மதீனாநகர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஆகியவற்றில் இன்று திங்கட்கிழமை வெடிகுண்டு வைக்கப்படவுள்ளதாக வவுனியா வைத்தியசாலையில் கிடைக்கப் பெற்ற கடிதத்தையடுத்தே இப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (9-250)

## வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு



தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சன்னார் கிராமத்தில் 24 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு நேற்று முதலாவது வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஜ், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-286)

## வவுனியாவில் இடம்பெற்ற நுங்குத் திருவிழா



(குருமன்காடு)

வவுனியா கோதண்டர் நொச்சிக்குளம் பகுதியில் அமைந்துள்ள குளத்திற்கு அருகே நுங்குத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"ஊருக்குத் தெரியும்படியாக நுங்கு குடித்து கொண்டாடுதலும் நாட்டுக்கோழி விருந்தோம்பலும்" எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற நுங்குத்திருவிழா சுயாதீன தமிழ் இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நுங்குத் திருவிழாவுக்கு 2000 இற்கு மேலான பனை விதைகளை விதைத்த மலர்மகள் விளையாட்டுக்கழகத்தினர் அனுசரணை வழங்கியிருந்தனர். இத்திருவிழாவில் நுங்கு குடித்தல், நுங்கு குளித்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் இளைஞர், யுவதிகள் பங்குபற்றியிருந்தனர். (9-250)

## விடுதலை அமைப்புக்கள் இணைந்து

# உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி





(குருமன்காடு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு விடுதலை அமைப்புக்களின் ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிரிழந்த உறவுகளின் 21 ஆம் நாளினை முன்னிட்டு அந்த உறவுகளின் ஆத்ம சாந்தி வேண்டி மௌனப் பிரார்த்தனையுடன் கூடிய அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான செ.மயூரன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி, ஈழப்புரட்சி அமைப்பின் முக்கியஸ்தர்கள், ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதகுருமார், வவுனியா நகரசபைத் தலைவர், வவுனியா தமிழ் தெற்கு தமிழ் பிரதேசசபையின் தலைவர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

## வவு-குடாகச்சகொடி காட்டில் தீப் பரவல்

# குடிமனைக்குள் பரவாது தடுத்த தீயணைப்புப்படை


(குருமன்காடு)

வவுனியா, தோணிகல பாறைக்கல்வெட்டு பகுதி காட்டில் ஏற்பட்ட திடீர் தீப் பரவல் அயலில் இருந்த வீடுகளுக்கு பரவாது வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் தடுத்துள்ளனர்.

வவுனியா, குடாகச்சகொடி, தோணிகல பாறைக் கல் வெட்டு பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தீ பரவியுள்ளது. இத் தீயானது அருகில் இருந்த மக்கள் குடிமனைக்குள் பரவிய நிலையில், வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா தீயணைப்புப் பிரிவினர் மக்கள் குடிமனைக்குள் தீ பரவலடையாது தடுத்ததுடன், காட்டுக்குள் ஏற்பட்ட தீ பரம்பலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். எனினும் இத் தீ விபத்து காரணமாக சுமார் 5 ஏக்கர் காட்டுப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சிறிதுநேரம் நின்று விட்டு அங்கிருந்து சென்று விட்டதாகவும் மேலதிக தண்ணீர் வசதியை தண்ணீர்த் தாங்கி மூலம் ஏற்படுத்தித் தருமாறு தீயணைப்புப் பிரிவினர் கோரிய போதும் அவர்கள் அது தொடர்பில் கண்டு கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (9-250)



# மன்னார் ஆயர் கலந்து கொண்ட நிகழ்வில் கடும் பாதுகாப்பு





(குருமன்காடு)

இந்தியா மற்றும் இலங்கை நாடுகளைச் சார்ந்த புனித யோசவ்வாஸ் கன்னியர் சபையைச் சார்ந்த 12 கன்னியாஸ்திரிகள் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்னும் தங்கள் துறவற வாழ்வுக்கான நித்திய வாக்குத்தத்தம் வழங்கும் சடங்கு நிகழ்வு மன்னார் மறை மாவட்டத்திலுள்ள பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வருகை தந்திருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்துக்கு வருகை தந்த பொதுமக்கள் ஆலய வளாகத்துக்குள் செல்லும் முன் பாதுகாப்பு படையினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (9-250)

# புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டல்

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கண்டாவளைப் பிரதேசத்தில் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடின்றி வாழும் மக்களுக்கான வீடுகளை வழங்கி மாதிரிக்கிராமங்களை உருவாக்கும் நோக்கில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடுகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான புதிய வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கண்டாவளை பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தே.வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பரந்தன், ஊரியான், கல்மடு பகுதிகளில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்தவர்களுக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு வீடுகளை வழங்கும் நோக்கில் வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)



## போருக்கு பின்னர்

# திடீர் பணக்காரர்களாக மாறியவர்களை விசாரியுங்கள் - ஜி.ரி.லிங்கநாதன்

(குருமன்காடு)

இலங்கையில் மூன்று மொழிகள் தான் அரச கரும மொழிகளாக காணப்படுகின்றன. அரபு மொழிக்கும் இந்த நாட்டிற்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்பதை விசாரிக்க வேண்டும் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு விடுதலை அமைப்புகளின் ஏற்பாட்டில் வவுனியாவில் நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 21 தாக்குதலானது தமிழ் மக்களைப் பொறுத்த வரை பல விடயங்களை கற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. 1915 ஆம் ஆண்டில் சிங்கள மக்களால் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அன்றிலிருந்து போர்முடிவுற்ற 2009 ஆம் ஆண்டு வரையான 94 வருடகாலப் பகுதியில் சிறுபான்மை மக்கள் இந்தநாட்டிலே வாழமுடியுமா? என்ற கேள்விக்குறி இருந்து வந்தது.

1915 ஆம் ஆண்டு சிங்கள மக்களால் முஸ்லிம் மக்கள் தாக்கப்படும்போது அவர்களுக்கு ஆதரவாக தமிழ்தரப்பு செயற்படவில்லை. அது நாம் வெட்கப்பட வேண்டிய விடயம். அன்றைய தமிழ் தலைவர்களான சேர் பொன். இராமநாதன், அருணாச்சலம் ஆகியோர் லண்டனிற்கு சென்று சிங்களத் தலைவர்களைக் காப்பாற்றும் பணியினை மேற்கொண்டார்கள். அதற்காக சிங்கள மக்கள் அவர்களைக் கொண்டாடி நன்றி செலுத்தியிருந்த சம்பவங்களும் நடைபெற்றிருந்தன.

ஆனால் எங்களுக்கு ஒரு நிலைமை இப்படிவரும் என்பதை அன்று இருந்த தலைமைகள் சரியாக கணக்கிட்டிருந்தால் இன்றைய துர்ப்பாக்கியநிலை எமக்கு வந்திருக்காது. இன்று இந்த அரசானது ஒரு சில தலைமைகளின் சுயநலன்களுக்காக நாட்டையே குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும் செயற்பாட்டை மேற்கொள்கிறது.

எனவே இந்த அரசு, முப்படையினர், பொலிஸாரிடம் நான் கேட்க வேண்டிய விடயம் ஒன்று இருக்கிறது. போரிற்கு பிறகு, இந்த நாட்டிலே திடீர் பணக்காரராக மாறியவர்களைப் பற்றி விசாரியுங்கள். அவர்களுக்கு இந்தப் பணம் எப்படி வந்தது என்று விசாரியுங்கள். அதேபோல் இலங்கையில் மூன்று மொழிகள் தான் அரசகரும மொழிகளாக காணப்படுகின்றன.


ஆனால் அண்மையில் அரபு மொழியிலே பல கட்டடங்களின் பெயர்ப்பலகைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அரபு மொழிக்கும் இந்த நாட்டிற்கும் என்ன சம்பந்தம் உள்ளது. எனவே அந்த விடயங்கள் விசாரிக்கப்பட வேண்டும்.

கொல்லப்பட்டவர்களை கத்தோலிக்கர்களாகப் பார்க்க வேண்டாம். அவர்கள் முழுக்க முழுக்க தமிழர்கள். மிக தெளிவாக தாக்குதலுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பௌத்த கோவிலும் இலக்கு வைக்கப்படவில்லை. ஒரு சிங்கள பௌத்தனும் சாகவில்லை. வெளிநாட்டின் நிகழ்ச்சிநிரலாக இருந்தாலும் எம்மை கருவறுக்கும் செயற்பாடாகவே இந்த தாக்குதலை பார்க்க முடியும். தற்போதைய நிலையில் ஒவ்வொரு இயக்கங்களும் தம்மை சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களிலாவது நாம் ஒற்றுமையாக செயற்படுவதனூடாகத்தான் எமது மக்களை காப்பாற்ற முடியும். எனவே அனைத்து இயக்கங்களும் மனம் திறந்து பேச வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-250)

## பல வருடங்களின் பின்னர்

# புனரமைக்கப்படவுள்ள நஞ்சுண்டான் குளம்

## சிரமதானப் பணியில் ஈடுபட்ட ஊர்மக்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வள்ளுவர்புரம், இளங்கோபுரம், மாணிக்கபுரம், தேராவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தாங்களுக்கு உரிய வயல் காணிகள் இல்லாது தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே தமது பகுதியில் பல நூறு வருடங்களாக பழமை வாய்ந்த ஒரு குளமான நஞ்சுண்டான் குளம் இருப்பதாகவும் அந்த குளத்தை புனரமைத்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை முன்வைத்தும் இது தொடர்பில் எந்தவிதமான சாதகமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக அக்கிராம மக்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவரின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் குளத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், இளங்கோபுரம், தேராவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் உழவு இயந்திரங்களில் குறித்த குளத்திற்குச் சென்று அங்கு இருக்கின்ற ஆலயத்தில் வழிபாடு ஒன்றை மேற்கொண்டதுடன் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள், மிக நீண்டகாலமாக எங்களுடைய கோரிக்கையாக இருந்த இந்த குளத்தினை மிக விரைவாக புனரமைப்பதனூடாக சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வயல் செய்கையை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புள்ளது.

இதனை உரிய முறையில் புனரமைப்புச் செய்து எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி செய்ய வேண்டும்.

இதன் மூலம் எமது 4 கிராமங்களும் பயன் பெறும். அத்துடன் குளத்தை புனரமைக்க நிதி ஒதுக்கி ஏற்பாடு செய்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தமது நன்றியை தெரிவித்தனர். (9-281)

# வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பொங்கல் விழா

(மல்லாவி)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக வன்னிவிளாங்குளம் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெற்று இரவு 9 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வினைத் தொடர்ந்து பொங்கல் திருவிழா ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை அதிகாலை வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதினை இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலையினரும் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரும் இணைந்து மேற்கொள்ளவுள்ளதுடன் பாதுகாப்பு கடமைகளை மாங்குளம் மற்றும் மல்லாவி ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்து விசேட பொலிஸ் அணியினருடன் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து ஒழுங்கமைக்கவுள்ளனர்.

அத்துடன் நாட்டில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆலய வளாகத்தில் வர்த்தக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அடியவர்களின் நேர்த்திக்கடனாக மேற்கொள்ளப்படும் பறவைக் காவடிகள் மற்றும் தூக்குக் காவடிகளுக்கு இம்முறை வழமைபோன்று அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் ஏனைய காவடிகள் உட்பட அடியவர்களின் நேர்த்திக் கடன்கள் வழமை போல ஆலய வளாகத்தில் நடைபெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9-15)

# பாரதம்




முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 10 ஆம் ஆண்டு நினைவெழுச்சி வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை லண்டனில் நடைபெற்றது.

## அவுஸ்திரேலிய தடுப்பு முகாம்களில் தற்கொலை மனநிலையில் அகதிகள்

பப்புவா நியூகினியாவில் உள்ள மனுஸ்தீவில் செயற்பட்டுவரும் அவுஸ்திரேலிய தடுப்பு முகாமில் அகதிகள் தற்கொலைக்கு முயலும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அகதிகள் நல சட்டத்தரணி ஜன் ரிண்டோல் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு படகு வழியாக செல்ல முயன்ற 500 இற்கும் மேற்பட்ட அகதிகள், சுமார் 6 ஆண்டுகளுக்கு மேலாக இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களை பல மாதங்களுக்கு பிறகு சந்தித்துள்ள அகதிகள் நல சட்டத்தரணி ஜன் ரிண்டோல், அகதிகளிடையே மன உளைச்சல் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதுவரை இம்முகாமில் இருந்த 7 அகதிகள் உயிரிழந்திருக்கின்றனர். அதில் 3 பேர் தற்கொலை செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.



கடந்த ஜனவரி மாதம் இம்முகாமை பார்வையிட்ட கத்தோலிக்க மதகுரு ஒருவர், அகதிகள் தங்களை வருத்திக்கொள்வதும் தற்கொலைக்கு முயல்வதும் அன்றாட நிகழ்வாக உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது மனுஸ்தீவில் உள்ள அகதிகள் நிலையைப் பார்வையிட்ட சட்டத்தரணி மனுஸ் மற்றும் நவுறுதீவில் உள்ள அகதிகளை வெளியேற்றி அவர்கள் அனைவரையும் அவுஸ்திரேலியாவுக்குள் கொண்டு செல்வது அவசர தேவையாக உள்ளது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (7)

## ஜெய்ஷ் - இ - முகமது அமைப்புடன் தொடர்புடைய குழுக்களுக்கு தடை!

### பாகிஸ்தான் அரசு முடிவு

சர்வதேச பயங்கரவாதி மசூத் அசாரின் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பு மற்றும் இந்தியாவின் மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட ஹாஃபீஸ் சயீத்தின் ஜமாத் உத்-தாவா அமைப்புடன் தொடர்புடைய 11 குழுக்களுக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

லாகூரில் செயற்படும் இந்த குழுக்களுக்கு தடை விதிக்கும் முடிவு நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், உள்துறை அமைச்சர் இஜ்ஜாஸ் ஷா ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் தேசிய பயங்கரவாத தடுப்பு ஆணையத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட தகவலின், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்புடன் தொடர்புடைய 7



குழுக்கள், ஜமாத் உத்-தாவா மற்றும் அதன் அறக்கட்டளையான ஃபலாஹ்-ஏ-இன்சானியாத் ஆகியவற்றுடன் தொடர்புடைய 5 குழுக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (7)

## துனிசியாவில் படகு

## 75 குடியேற்றவாசி

### 16 பேர் உயிருடன் மீட்பு

**துனிசியாவின் கடற்பரப்பில் நேற்று முன்தினம் குடியேற்றவாசிகளின் படகு கவிழ்ந்ததில் 75 பேர் பலியாகியுள்ளனர்.**

குடியேற்றவாசிகள் பலியான சம்பவத்தை உறுதி செய்துள்ள யு.என்.எச்.சீ.ஆர் 16 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் உயிர் தப்பியவர்களை துனிசிய கடற்படையினர் கரைக்கு கொண்டுவந்துள்ளனர் எனவும் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளது.

படகு கவிழ்ந்த சம்பவத்தை அறிந்ததும் கடற்படையினர் உடனடியாக அந்த பகுதிக்கு விரைந்தனர். அவ்வேளை மீன்பிடிப்படகொன்று உயிர் பிழைத்தவர்களை காப்பாற்றிக்கொண்டிருந்தது என துனிசிய கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## அணுவாயுத பரிசோ

## வடகொரியா கைவிட

### 70 நாடுகள் கூட்டாக வ

அணுவாயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத்திட்டங்களை கைவிட வேண்டும் என வடகொரிய அரசாங்கத்திடம் 70 நாடுகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனம் மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களையும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் பரிசோதனை செய்து வந்தது.

அத்துடன், உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளையும் வடகொரியா கண்டுகொள்ளவில்லை.

இது அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியை கொடுக்க, இரு நாடுகளுக்கும் இடையே போர்



பதற்றம் உருவானது.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் சந்தித்து பேசினர்.

இதன் போது கொரிய தீபகற்பத்தை


## இந்தோனேசிய சிறையில் கலவ

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவிலுள்ள சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 150 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறைச்சாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட கலவரத்தினைத் தொடர்ந்து கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனைத் தொடர்ந்து அதிகாரிகள் நடத்திய தேடு






# த கவிழ்ந்து விபத்து

# ாசிகள் உயிரிழப்பு!



லிபியாவிலிருந்து புறப்பட்ட படகு இயந்திரக்கோளாறு காரணமாக நீரில் மூழ்கியது என உயிர்தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்தியதரைக்கடலை கடக்க முயல்பவர்கள் எதிர்கொள்ளக் கூடிய ஆபத்தை இந்த துன்பகரமான சம்பவம் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளது என யு.என்.எச்.சீ.ஆர் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான அகதிகளும் குடியேற்றவாசிகளும் லிபியாவை தளமாக பயன்படுத்தி மத்தியதரைக்கடலை கடந்து ஐரோப்பாவிற்குள் நுழைவதற்காக வருடம் தோறும் முயற்சிகளை மேற்கொள்வதும் அதன்போது படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி இறப்பதும் வழமையாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ாதனையை

# ிடவேண்டும்

## வலியுறுத்து



அணு ஆயுதங்கள் இல்லாத பகுதியாக மாற்ற வடகொரியா முன்வந்தது.

இது தொடர்பாக இரு தரப்பிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் ஆயுத சோதனைகளை வடகொரியா நிறுத்தியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அமெரிக்காவுடனான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், வடகொரியா மீண்டும் ஆயுத சோதனையை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை சோதனை செய்தது. இதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனினும் இது தற்காப்புக்காக நடத்தப்பட்ட பயிற்சிதான் என வடகொரியா விளக்கமளித்துள்ளது.

இந்நிலையில், வடகொரியாவின் இந்த செயல் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், அணு ஆயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் அது தொடர்பான சோதனை திட்டங்களை கைவிட வேண்டும் என 70 நாடுகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக பிரான்ஸ் கொண்டு வந்த வரைவில், அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஆசிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என மொத்தம் 70 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

இதேவேளை, வடகொரியாவை ஆதரிக்கும் சீனாவும் ரஷ்யாவும் குறித்த வரைவில் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# லவரம்; கைதிகள் தப்பியோட்டம்



தல் வேட்டையில் 15 கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், தப்பியோடியுள்ள ஏனைய கைதிகளை மீண்டும் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கலவரம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கலவரம் ஏற்பட்ட இந்தோனேசியாவின் சுமத்ரா தீவிலுள்ள சிறைச்சாலையில் சுமார் 650 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்குமா?

## போர்க்கப்பல்கள்,விமானங்கள்,தளபாடங்கள் விரைவு



(வோஷிங்டன்)

அமெரிக்கப் போர்க்கப்பல்கள், விமானங்கள், தளபாடங்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு விரைந்துள்ளன. இதனால் ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஈரான், வல்லரசு நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டு அணுவாயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் எனக் கருதப்பட்ட அந்த ஒப்பந்தம், ஈரான் அணு ஆயுத செயற்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வரவும், அதற்கு ஏற்ப அந்த நாட்டின் மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெறவும் வழிவகுக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ஒபாமா காலத்தில் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம், அமெரிக்காவின் தற்கால ஜனாதிபதி ட்ரம்புக்கு பிடிக்கவில்லை. இதில் அமெரிக்க நலன் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதே அவரது கருத்து.

இதன் காரணமாக, கடந்த ஆண்டு திடீரென இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதாக ட்ரம்ப் அதிரடியாக அறிவித்தார்.

இது அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தியது. ஈரான் படையை கறுப்புப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்தது.

அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் ஈரானின் பொருளாதாரத்தை பின்னுக்கு செல்ல வைத்தது. இதுவரை இல்லாத வகையில் ஈரான் நாணய மதிப்பு சரிவை சந்தித்தது. இதனால் வெளிநாட்டு முதலீடுகள் பாதித்தன.

ஈரானை புதிய ஒப்பந்தம் போட வைக்க வேண்டும், அந்த ஒப்பந்தம் அணு ஆயுதங்கள் மட்டுமின்றி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் கட்டுப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று அமெரிக்கா கணக்குப் போடுகிறது.

ஈரானும் மிரட்டல் விடுத்து வருகிறது. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தியில் தடையை ஏற்படுத்தி விடுவோம் என்கிறது. இது உலகளாவிய எண்ணெய் போக்குவரத்துக்கு பெரும் தடைச்சுவராக அமைந்து விடும்.

இந்த நிலையில் ஈரான் மீது கண் வைத்து அமெரிக்கா போர்க்கப்பல்களையும் போர் விமானங்களையும் தளபாடங்களையும் நகர்த்துகிறது. கட்டார் தளத்துக்கு அமெரிக்காவின் பி-52 ரக போர் விமானங்கள் போய்ச் சேர்ந்து விட்டன.

ஈரான் மூலம் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க வீரர்களுக்கு ஆபத்து நேரலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், தளபாடங்களை அனுப்பி வைப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

ஆனால் இதை ஈரான் நிராகரித்துள்ளது. இது முட்டாள்தனமான செயல் என ஈரான் விமர்சித்துள்ளது. ஈராக்கில் மட்டும் அமெரிக்காவின் 5 ஆயிரத்து 200 படைவீரர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய கிழக்கு பகுதிக்கு அமெரிக்கா போர்க்கப்பல்களையும் போர் விமானங்களையும் தளபாடங்களையும் அனுப்பி வைப்பது, ஈரானுடன் போர் தொடுப்பதற்கான முன்னோட்டமா என்ற கேள்வி சர்வதேச அரசில் எழுந்துள்ளது. (7)

# தலிபான்களின் சிறையிலிருந்து 10 பேரை விடுவித்த இராணுவம்

(குந்தூஸ்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் 10 பேரை பாதுகாப்புப் படையினர் விடுவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள், அரச படைகளுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். பாதுகாப்புப் படைகளுக்கு உளவு பார்ப்பதாக கூறி பொதுமக்களையும் சிறைப்பிடித்து துன்புறுத்துகின்றனர். தலிபான்கள் வசம் உள்ள பகுதிகளை மீட்க இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், குந்தூஸ் மாகாணம், சகர் தாரா மாவட்டத்தில் தலிபான்கள் வசம் உள்ள பகுதிகளை இராணுவம் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியது. இதில் தலிபான்களுக்கு பின்னடைவு ஏற்பட்டது. தங்கள் இடங்களை காலி செய்துவிட்டு தலிபான்கள் தப்பிச் சென்றனர். இதையடுத்து மேலும் முன்னேறிய இராணுவம் அனைத்துப் பகுதிகளிலும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது.

அவ்வகையில், அக் சரே கிராமத்தில் உள்ள தலிபான்கள் பாதுகாப்பு அரண்களை பாதுகாப்புப் படையினர் தகர்த்தனர். தலிபான்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். பின்னர் அங்கு நேற்று தேடுதல் வேட்டை நடத்தியபோது, தலிபான்களின் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 10 பொதுமக்களை விடுவித்தனர்.

அவர்கள் பாதுகாப்பாக இராணுவ முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். விசாரணைக்குப் பிறகு அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களின் குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. (7)

# அவுஸ்திரேலியாவில் வாக்களிக்காத ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேருக்கு அபராதம்!

தேர்தலில் வாக்களிக்காத ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேருக்கு அவுஸ்திரேலியாவில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு இடம்பெற்ற விக்டோரிய மாநிலத் தேர்தலில் வாக்களிக்கத் தவறியவர்களுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாக்களிக்கத் தவறிய ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேரையும் தலா 81 டொலர்களை அபராதமாக செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேர்தலில் வாக்களிக்கத் தவறிய இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் வாக்களிக்காமைக்கான காரணம் கோரி கடந்த மார்ச் மாதம் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த நிலையில் இவர்களில் 60 ஆயிரம் பேர் வழங்கிய பதில்கள் ஏற்புடையதாக இருந்ததாகவும் ஏனையோர் தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அபராதம் செலுத்துமாறு பணிக்கப்பட்டவர்கள் குறித்த தொகையை 35 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும் அல்லது review-மீளாய்வுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இந்துக்கள்- பௌத்தர்கள் இடையிலான பிணைப்பை தமிழ் அரசியல் வாதிகளே துண்டிக்க முயற்சி

## சிங்கள ராவய சுதந்த தேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**இந்துக்களும், தமிழர்களும் எம்முடன் மிக நெருங்கிய பிணைப்பைக் கொண்டவர்கள். அவர்களது மதம் மற்றும் கலாசாரத்திற்கும் எமது கலாசாரத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதனூடாக நாம் ஒன்றிணைந்து வாழக் கூடிய பின்னணியொன்று உருவாகியிருக்கின்றது. எனினும் அந்தப் பிணைப்பை தமிழ் அரசியல் வாதிகளே திட்டமிட்டுத் துண்டிக்க முயற்சிக்கின்றார்கள். அதற்கு ஒருபோதும் இடமளிக்காமல் ஒருமித்து செயற்பட வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

இஸ்லாமிய தீவிரவாதச் செயற்பாடுகளால் சிங்கள, தமிழ் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக தைரியமாகக் குரல் கொடுக்கக்கூடியவர் ஞானசார தேரர் ஒருவர்தான் என்ற காரணத்தால் அவுரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் வலுப்பெற்றுள்ளது என்று குறிப்பிட்ட சுதந்த தேரர் ஞானசார தேரரை வெசாக் பண்டிகைக்கு முன்னர் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் அண்மையில் நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை அடுத்து மீண்டும் ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. அத்தோடு "இன்னமும் குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல் இருக்கின்றது. மேலும் 50 பௌத்த விகாரைகள் தாக்குதலுக்கு இலக்காகலாம்" என்று கடந்த மாதம் 29 ஆம் திகதி ஞானசாரர் வெளியிட்ட கருத்தையடுத்து இந்த வேண்டுகோள் வலுப்பெற்றிருக்கிறது.

எனவே அதனை அடிப்படையாகக் கொண்டு ஞானசாரரின் விடுதலையை வலியுறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகக் கூறிய சுதந்த தேரர், இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் விகாரைகள் மாத்திரமன்றி இந்து ஆலயங்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அதேவேளை இஸ்லாமிய பள்ளிவாசல்களில் இருந்து வாள்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பெருந்தொகையான வாள்களை வைத்திருப்பதிலிருந்து இது தாக்குதல் ஒன்றுக்கான முன்னேற்பாடு என்பது தெளிவாகப் புலனாகின்றது. எனினும் சில முஸ்லிம் மத மற்றும் அரசியல் தலைவர்கள் அவ்வாறு ஆயுதங்களை வைத்திருந்தமை தவறு என்பதை ஏற்றுக்கொள்ளாமல், அதற்கு நியாயம் கற்பிக்க முற்படுகின்றார்கள். இத்தகைய செயற்பாடுகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'எங்கள் நோக்கத்தை மற்றவர்கள் மீது திணிக்க முடியாது'

# இலங்கை பௌத்த நாடு அல்ல!

## அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு



(மாத்தறை)

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்ல எனவும் இலங்கையர்களின் நாடு எனவும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்னாலும் சிலர் போன்று கார்ட்போர்ட் வீரனாக முடியும். இலங்கை சிங்கள நாடு, பௌத்த நாடு, சிங்களவர்களுக்கு விரும்பியது போன்று வாழ முடியும் என பிரசாரம் செய்ய முடியும்.

எனினும் இலங்கை பௌத்தர்களின் நாடு அல்ல. இலங்கையர்களின் நாடு. அந்த இலங்கையர்களின் நாட்டில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

நாங்கள் பெரும்பான்மையினர் என்ற காரணத்திற்காக எங்கள் நோக்கத்தை மற்றவர்கள் மீது திணிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போலி நாணயத்தாள்களுடன் குருநாகலில் ஒருவர் கைது

(குருநாகல்)

குருநாகல் பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குருநாகல் வலய குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தனியார் வங்கி ஒன்றில் வைத்து சந்தேகநபர் கைது செய் யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 1000 ரூபா போலி நாணயத்தாள்கள் 3 பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. வெல்லவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குதிரை

குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார் ஒருவர். குவித்து ஓடத் தெரிந்தால் அது குதிரை, கனைத்துக் கொண்டே சுமக்கத் தெரிந்தால் அது கழுதை என்று வேடிக்கையாக விளக்கம் கொடுத்தார் இன்னொருவர்.

இந்த உலகத்திலே சுமப்பதற்கு என்று பிறந்தது கழுதை. ஓடுவதற்கு என்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்கள் முதுகில் சவாரி செய்வதற்கு பிறந்தவன் மனிதன். அதால் தான் குதிரை முதுகில் ஏறி உட்காந்து கொள்கின்றார்கள். அது மட்டுமல்ல... அது அங்கேயும் இங்கேயும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டும் என்பதற்காக அதற்கு கண்ணடக்கம் மாட்டி விடுகின்றான்.

குதிரையின் கண் கொஞ்சம் வித்தியாசமானது. ஆட்டிற்கும் மாட்டிற்கும் இருக்கின்றது போல் இல்லை. குதிரை தலையில் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக் கண் பார்வை கிடைக்கின்றதாம். அது ஒரேசமயத்தில் தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத் திசையிலும் பார்க்க முடியும்.

தனக்கும் பின்னால் என்ன நடக்கின்றது என்பதனையும் பார்க்க முடியுமாம். நம்மால் இதுபோல் பார்க்க முடிந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்? அதனுடைய உடம்பால் மறைக்கப்படுகின்ற பின் பகுதியை மட்டும் தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னால் இருக்கின்ற ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கின்ற போது கண்களை முன் பக்கம் திருப்பி பார்வையை குவியப்படுத்தும். அப்போது அதற்கு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப் பார்வையும் மறைந்து விடும்.

அது இரண்டு கண் பார்வையையும் குவித்து பார்க்கின்ற போது அதன் கண்கள் குறைவான தொலைவில் இருக்கின்ற பொருட்களை குவியப்படுத்த முடியாதாம். அது தான் உண்கின்ற இரையைக்கூட பார்ப்பதே இல்லையாம். நாம் கூட சில சமயங்களில் அவசரமாகச் சாப்பிடுகின்ற போது சாப்பிடுவது என்ன என்பதனை கவனித்தா சாப்பிடுகின்றோம்? சாப்பிட்டது என்ன என்பதனை கைக்கும் – வாய்க்கும் தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டுகின்ற போது, சவாரி செய்கின்ற போது அதன் கண்ணிற்கு கண்ணடக்கம் என்று கூறி திரை போட்டு மறைப்பது எதற்கு என்றால்... அப்பதான் அது போகின்ற திசையில் மட்டும் கவனம் செலுத்தி ஓடும். பக்கத்திலும் பின்னாலும் என்ன நடக்கின்றது என்பது அதற்குத் தெரியாது.

எந்தநேரத்தில் கால்களைத் தூக்கி எழும்ப வேண்டும் என்பதனை குதிரை மேல் உட்கார்ந்திருந்தவர் சைகைகள் மூலமாக தெரிவிப்பார். அதைப் புரிந்து கொண்டு தாண்டி விடுகின்றது. அவர் தவறுதலாக சைகை காட்டிவிட்டால் குப்புற விழ வேண்டியதுதான்! குதிரையின் கண்களை விட உயர்ந்த மட்டத்திலே இருக்கின்ற பொருளையும் அதனால் தெளிவாகப் பார்க்க முடியாது. அது மட்டுமல்ல நிறங்களையும் அதனால் கண்டு பிடிக்க முடியாது. (நிறக்குருடு)

சரி! இப்படி எல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கின்றது? இதற்கு கை கொடுக்கின்றது அதனுடைய கழுத்து! அதன் நீளமான கழுத்தின் உதவியால் தலையை தகுந்த நிலைமைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்ணில் பொருள் தெளிவாகத் தெரிகின்றது போல் செய்கின்றது.

தலையைத்தூக்கிக் கொண்டால் தூரத்தில் உள்ளதை பார்க்கும். தாழ்த்திவிட்டது என்றால் கிட்ட உள்ளதை பார்க்கும். கண்ணிலே விழித்திரை இருக்கின்றது. அது ஏனைய விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தடையாக இருக்கும். அதனால் தான் தலையை திருப்பி விம்பம் விழுகின்றது போல் செய்து கொள்ள முடியும்.

ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமனாக... சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக் குதிரை தன்னுடைய தலைக்கு முன்னால் இருப்பதை தெளிவாக பார்க்க முடியும். அதுதான் உயர் தரமான குதிரை.


குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிகவும் முக்கியம். ஒருவர் ஒரு குதிரைக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னால் நின்று கொண்டிருக்கும். இவர் பின்னால் கொஞ்சம் தூரத்தில் இருந்து வேகமாக ஓடிவந்து ஒரு ஜம்பண்ணுவார். அப்படியே உயரே ஆகாயத்தில் எழும்பி குதிரை முதுகில் போய் பொத்தென்று உட்காருவார். அதே விநாடி அந்த குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி!

இதை பார்த்த ஒரு பெரியவர் இப்படி பொத்தென்று அதன் முதுகிலே போய் உட்கார்ந்தார். குதிரையின் இடுப்பு உடைந்து விடாதா? என்றார். இவர் இதையெல்லாம் காதில் வாங்கவில்லை. சில நாட்கள் கழித்து பயிற்சி கொடுத்தவர் அந்தப் பெரியவரை மறுபடியும் பார்த்தார். ஐயா! நீங்கள் கூறியது போல் இடுப்பு உடைந்து விட்டது என்றார். குதிரைக்கா? என்றார். இல்லை எனக்கு என்றார் இவர். எவ்வாறு என்று கேட்டார்.

குதிரைக்கு பயிற்சி எல்லாம் கொடுத்தேன். அது முடிந்த பின் வழக்கம் போல் பின்னாலிருந்து ஓடி வந்து ஜம்பண்ணி குதிரை முதுகில் உட்காரப் போனேன். நான் உட்காருவதற்கு முன் ஓட ஆரம்பித்தது. தரையிலே உட்காந்து விட்டேன். அது தான் இப்படி ஆகி விட்டது என்றார்.

# தனியாரின் காணிப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் –எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



01

**காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் மத்தியஸ்த சபை (இணக்க சபை) யின் பங்களிப்பு.**

நாளாந்தம் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைப்பதில் பொலிஸாரும் நீதிமன்றங்களும் பிரதான இடத்தை வகிக்கின்றன. நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பில் ஒரு கட்சிக்காரர் திருப்தி அடையும் அதேவேளை மற்றக் கட்சிக்காரரை பொறுத்தவரை அத்தீர்ப்பு அவருக்கு பாதகமாக அமையும். மேலும் நீதிமன்றங்களில் நடைமுறைச் சிக்கல் மற்றும் போதுமான அளவு வளங்கள் இல்லாத காரணத்தால் நியாயமான காலப்பகுதிக்குள் எமக்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ளது. வழக்குகள் முடிவடைய பல வருடங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளதை காணலாம்.

நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான பொறுப்பை மக்கள் எதிர்பார்க்கும் வகையில் தாமதமின்றி நிறைவேற்றுவதற்காக நாட்டின் நீதிமன்ற முறைமையில் உள்ள வழக்குகள் தேங்கி நிற்கும் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் சிறிய பிணக்குகளைத் (ஒரு குறிப்பிட்ட பெறுமதிக்கு குறைந்த) தீர்த்து நீதியை நிலைநாட்டுவதற்காக 1988ஆம் ஆண்டு 72ஆம் இலக்க சட்டத்துக்கு அமைவாக, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவை அமைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. மத்தியஸ்த சபைகள் இந்த ஆணைக்குழுவின் கீழ் இயங்கி வருகின்றன. மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்குவது நீதியமைச்சின் பணியாகும். மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய பிணக்குகளில் காணிப் பிரச்சினையும் ஒன்றாகும்.

இச் சட்டம், 1997 ஆம் ஆண்டின் இல.15, 2003 ஆம் ஆண்டின் இல.21, 2011 ஆம் ஆண்டின் இல. 4, 2016 ஆம் ஆண்டின் இல.15 சட்டங்களின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

2003 ஆம் ஆண்டு 21 இலக்க சட்டம், மத்தியஸ்த (விசேட வகையான பிணக்குகள்) சட்டம், Mediation (Special Categories of Disputes) Act, No. 21 of 2003) என அழைக்கப்படுகிறது. இச் சட்டத்தில் மத்தியஸ்த சபை உறுப்பினர்களின் கடமைகள், அதிகாரங்கள், நடத்தைகள், விசேட தேவைக்கு மத்தியஸ்த சபை அமைத்தல் போன்றவை பற்றி கூறப்பட்டுள்ளது.

● மத்தியஸ்தம் என்றால் என்ன?

மத்தியஸ்தம் என்றால் என்ன? என்பதை நோக்கும் போது, உதவியுடன் கூடிய கலந்துரையாடலே மத்தியஸ்தமாகும் என்பதே விடையாகும். அதாவது சுயவிருப்புடன் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பக்கச்சார்பற்றதும் மூன்றாம் தரப்பின் பங்களிப்புடனும் பிணக்காளர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையிலும் தீர்வு ஒன்றுக்கு நெருங்குவதற்கு உதவும் கலந்துரையாடல் மத்தியஸ்தமாகும். எமது சமூகத்தில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளையும், பிணக்குகளையும், தவறுகளையும் தீர்த்துக் கொள்வதற்கு மத்தியஸ்த சபைகள் பெரும் பங்காற்றி வருகின்றன. இதனால் ஆசியாவில் இலங்கை மத்தியஸ்த செயற்பாட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் ஒரு முன்னணி நாடாக மாறியுள்ளது.

**இணக்க சபைகள் என்பது** சாதாரண பொதுமக்கள் மத்தியிலிருந்து, அரசியல் கலப்பற்றவர்களையும், சமூக அந்தஸ்து மிக்கவர்களையும் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப்படும் தொண்டர் அடிப்படையிலான ஒரு சேவையாகும். பத்து வருடங்களாக இணக்க சபைகளில் கடமையாற்றுவோருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவி வழங்கப்படுகின்றது.

மத்தியஸ்த சபைகளின் தன்மைகளாக செலவற்ற இணக்கப்பாடு, விரைந்த இணக்கப்பாடு, அந்நியோன்னியமாகத் திருப்தி தரும் முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருத்தல், தமக்கேயான தீர்வுகளுக்குத் தாமே வருதல், அலைச்சல் இன்மை, அன்பான வார்த்தைகள், குறைவற்ற மரியாதை, இணக்கப்பாடு அனுகூலமாய் இருத்தல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

மத்தியஸ்த சபை என்பது ஒரு நீதிமன்றம் அல்ல. அதேபோன்று ஆட்களுக்கு தீர்ப்பளிக்கும் செயல் முறையல்ல. இது நீதிமன்ற நடவடிக்கை முறையைப் போன்று விதிமுறைப்பட்ட செயல் முறை போன்ற வகையாகவும் அமையாது. மத்தியஸ்த சபையானது பிணக்காளர்கள் சுயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை மிகுந்த பரஸ்பர ஒத்துழைப்புடன் பெற்றுக்கொள்ள உதவுகின்றது.

நீதிமன்ற கட்டமைப்புக்கு வெளியே பிணக்குகளுக்கு உரிய தீர்வுகளைக் காண்பதில் இணக்க சபைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இச் சிறப்பினை மக்களுக்கு கொண்டு செல்ல நீதியமைச்சினால் ஆண்டு தோறும் ஒரு தினம் ஒதுக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றது. பீதியுடனும், ஒரு விதமான தயக்கத்துடனும்தான் வழக்காளிகள் நீதிமன்றத்திற்குள் செல்கின்றனர். ஆனால் இணக்க சபைகளில் அவ்வாறல்ல. அங்கு பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு வருபவர்கள் நட்பு ரீதியாக அணுகப்படுகின்றனர்.



சங்கானை மத்தியஸ்த சபை தவிசாளர் வைரமுத்து சிவபாலன் ஜனாதிபதியின் சான்றிதழ் பெறல் -2010ம் ஆண்டு

பிணக்காளர்கள் தாமாக பிணக்குகளை தீர்த்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் நலன்சார் கலந்தாலோசனைகளை ஏற்படுத்தி, பிணக்காளர்களை ஒரு சுமுகமான தீர்விற்கு வர மத்தியஸ்தர்கள் ஊக்கப்படுத்துகின்றார்கள். சரியான புரிந்துணர்வு இன்மை, விளக்கமின்மை என்பவையே அதிகமான பிணக்குகளுக்கு அடிப்படையாக அமைகின்றது. "நானா நீயா" என்ற மன உணர்வு பிணக்குகளுக்கு இன்னமும் தீனி போட்டு பிணக்குகளை பெருப்பித்து விடுகின்றது. பிணக்காளர்கள் திறந்த மனத்துடன் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறி கலந்துரையாட ஒரு வெளி ஏற்படுத்தப்படுமிடத்து அது அதிகமான பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்துவிடும். அவ்வாறான வெளியை, சூழலை, சந்தர்ப்பத்தை மத்தியஸ்தசபைகள் ஏற்படுத்திக் கொடுத்து பிணக்குகளை தீர்த்து வைக்கின்றன.

நீதி அமைச்சினது வழிகாட்டலின் கீழ் ஓய்வுபெற்ற நீதிபதிகள், சமூகத் தலைவர்களை கொண்டதாக மத்தியஸ்த சபை ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதன்கீழ் மத்தியஸ்த சபைகள் பரிபாலனம் செய்யப்படுகின்றன. அநேகமாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் கீழும் ஒரு மத்தியஸ்த சபை நிறுவப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் இலங்கையில் சிறப்பாக செயற்படுகின்ற மத்தியஸ்த சபைக்கான ஜனாதிபதியின் சான்றிதழ் யாழ். சங்கானை மத்தியஸ்த சபை பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இலங்கையில் 326 இற்கும் அதிகமான மத்தியஸ்த சபைகள் இருப்பதோடு அவற்றுக்கு 7900 இற்கு அதிகமான மத்தியஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டில் மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை 172,892 ஆகும்.

இதில் வட மாகாணத்தில் மிகவும் குறைவான பிணக்குகள் (8793) மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. 2010ஆம் ஆண்டில் இலங்கையில் சிறப்பாக செயற்படுகின்ற மத்தியஸ்த சபைக்கான ஜனாதிபதியின் சான்றிதழ் யாழ்.சங்கானை மத்தியஸ்த சபை பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

● 2017 ஆம் ஆண்டு மத்தியஸ்த சபைகளின் செயற்பாடு

கீழே உள்ள அட்டவணை 2017ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் உள்ள மத்தியஸ்த சபைகள் எவ்வாறு தொழிற்பட்டன என்பதைக் காட்டுகின்றது.

| | பிணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2017க்கு முன் இருந்த பிணக்குகள் | 105.712 |
| 2017ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற பிணக்குகள் | 253.364 |
| மொத்தப் பிணக்குகள் | 359.076 |
| 2017ஆம் மத்தியஸ்தம் செய்ய எடுக்கப்பட்டவை | 190.566 |
| தீர்வு காணப்பட்ட பிணக்குகள் | 97,398 |
| தீர்வு காணப்பட்ட பிணக்குகள் % | 51% |

2017ஆம் ஆண்டு பிணக்குகள் எவ்வாறு மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன என்பதைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகின்றது.

| பிணக்குகள் ஆற்றுப்படுத்திய நிறுவனம் | பிணக்குகளின் எண்ணிக்கை | சத வீதம் |
|---|---|---|
| நீதிமன்றம் | 17,102 | 7% |
| பொலிஸார் | 54,802 | 22% |
| வங்கி, நிதி நிறுவனங்கள் | 156,208 | 61% |
| பிணக்காளிகள் | 3,952 | 2% |
| மற்றையோர் | 21,300 | 8% |
| மொத்தம் | 253,364 | 100% |

2017ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட பிணக்குகள்

| பிணக்குகள் ஆற்றுப்படுத்திய நிறுவனம் | தீர்வு காணப்பட்ட பிணக்குகள் எண்ணிக்கை |
|---|---|
| நீதிமன்றம் | 9,106 |
| பொலிஸார் | 26,560 |
| வங்கி, நிதி நிறுவனங்கள் | 52,130 |
| பிணக்காளிகள் | 1,450 |
| மற்றையோர் | 8,152 |
| மொத்தம் | 97,398 |

2017ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் தீர்வு காணப்பட்ட பிணக்குகள்

| | பிணக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | இலங்கை | வட மாகாணம் |
| 2017ஆம் மத்தியஸ்தம் செய்ய எடுக்கப்பட்டவை | 190,566 | 12,349 |
| தீர்வு காணப்பட்ட பிணக்குகள் | 97,398 | 6,885 |
| தீர்வு காணப்பட்ட பிணக்குகள் % | 51% | 56% |

(தொடரும்...)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி மட்டுமல்ல சர்வதேச பயங்கரவாதம் குறித்தும் தெரியும்

## அரசு மீது கோத்தபாய குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி குறித்து மட்டுமல்லாது, சர்வதேச பயங்கரவாதச் செயற்பாடுகளையும் மகிந்த அரசாங்கம் இனங்கண்டிருந்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனினும், இது தொடர்பிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார். சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

"பயங்கரவாதச் செயற்பாடுகள் குறித்து எமது காலத்தில் சிறந்தவொரு ஒருங்கிணைப்பொன்று இருந்து வந்தது. தொடர்பாடல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சிறப்பான வழியில் முன்னெடுக்கப்பட்டன.

இதுமட்டுமல்லாது அனைத்துக் கட்டமைப்புக்களும் அன்று பலமாக இருந்தமையாலேயே எம்மால் அன்று விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.

அதேபோல், பயங்கரவாதம் தொடர்பிலும் நாம் அன்று மிகவும் அவதானத்துடனேயே செயற்பட்டோம். இது குறித்த நடவடிக்கைகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பலப்படுத்த, விசேட அதிகாரியொருவரை நாம் அமெரிக்காவுக்கு பயிற்சிகளுக்காக அனுப்பியிருந்தோம். அவர் இதற்கான பயிற்சிகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பியவுடன், அவரை புனாய்வுத் துறையின் தலைவராக நியமித்து முக்கியமான பொறுப்புக்களை ஒப்படைத்தேன்.

தேசியம் மற்றும் சர்வதேச ரீதியாக பயங்கரவாதத்தை கண்காணிக்கும் பொறுப்பே அவருக்கு பிரதானமாக வழங்கப்பட்டிருந்தது.

கணனி உள்ளிட்ட அதியுச்ச தொழில்நுட்ப சாதனங்கள் மட்டுமன்றி, அரபு மொழி தேர்ச்சி பெற்ற அதிகாரிகளையும் அன்று எமது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நியமித்திருந்தோம்.

இவ்வாறு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் இலங்கையின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் நாம் கூடிய அக்கறையுடனேயே செயற்பட்டு வந்தோம்.

எனினும், 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தச் செயற்பாடுகள் தொடரவில்லை என்றே குறிப்பிட வேண்டும். பயங்கரவாதச் செயற்பாடுகளை கண்காணிப்பது குறித்து தேர்ச்சி பெற்ற அதிகாரிகள், இந்த அரசாங்கத் தரப்பால் வெளியேற்றப்பட்டனர். இதனால், பயங்கரவாதத்தை கண்காணிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

தற்போதுள்ளவர்கள், புலிகளின் மீள் எழுச்சி குறித்து அதிக அக்கறை செலுத்தினார்களே தவிர, சர்வதேச பயங்கரவாதம் குறித்து பெரிதாக கண்டுகொள்ளவில்லை. இதன் பாரதூரத்தை இவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. இதனாலேயே இவ்வளவு விளைவுகள் ஏற்பட்டுள்ளன. நாம் புலிகளின் மீள் எழுச்சி குறித்து மட்டுமன்றி சர்வதேச பயங்கரவாதச் செயற்பாடுகளையும் இனங்கண்டிருந்தோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 2 வாரங்களின் பின்னர் சீயோன் தேவாலயத்தில் நேற்று ஞாயிறு வழிபாடு





(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சீயோன் தேவாலயம் உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து தேவாலயங்களிலும் ஞாயிறு திருப்பலிகள் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் அனைத்து கத்தோலிக்க திருச்சபை மற்றும் மெதடிஸ்த திருச்சபையின் திருப்பலிகள் நடைபெற்ற போதிலும் மக்களின் பிரசன்னம் மிகக்குறைவாகவேகாணப்பட்டது.

புனித மரியாள் பேராலயம், காந்தி கிராமம், கிராம சுபிஷேச சபை மற்றும் சீயோன் தேவாலயத்தின் திருப்பலி வில்லியம் ஓல்ற் மண்டபத்திலும் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இடம் பெற்றன.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பிரதான தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து பயங்கரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் 250இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததோடு, நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்த நிலையில், தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு, தேடுதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தொடர்ந்தும் அச்சமானதொரு சூழ்நிலை இலங்கையில் நிலவி வருகின்றமையால், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை பாடசாலைகள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கு பொதுமக்கள் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, கடந்த இரண்டு வாரங்களாக இலங்கையின் அனைத்து கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களில் திருப்பலி பூஜைகளும் ஒப்புக் கொடுக்கப்படாமல் இருந்து வந்த நிலையில், நேற்று மீண்டும் தேவாலயங்கள் திறக்கப்பட்டு பூஜைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் சிறுவர்கள் உடல் ரீதியான தாக்கத்திற்குட்பட்டுள்ளனர்

## விசேட வைத்தியர் தீபால் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சில சிறுவர்களிடம் உடலியல் ரீதியான தாக்க நிலைமைகளை அவதானிக்க கூடியதாக உள்ளது என சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையை மறந்து பிள்ளைகள் வழமையான வாழ்க்கை நிலைக்கு திரும்ப வழியேற்படுத்த வேண்டும் எனவும் அவர் பெற்றோரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை இலங்கையில் தற்போதைய பாதுகாப்பு தொடர்பில் கேள்வியெழும்பும் சிறுவர்களிடம் அவர்களின் அச்ச மனப்பான்மையை போக்கும் வகையில் விடையளிக்க வேண்டும்.

உடல் சோர்வு, உணவு உட்கொள்ள இயலாமை, உறக்கமின்மை போன்ற உடலியல் தாக்கங்களே சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

பாடசாலை விடுமுறைக் காலம் அதிகரிக்கப்பட்டமையும் இவ்வாறான தாக்கங்கள் ஏற்படக் காரணமாகியுள்ளன என மேலும் தெரிவித்தார். (7)

# அப்பாவிகளை இலக்கு வைப்பது பிரிவினையை அதிகரிக்கும்

## முஸ்லிம் மக்கள் அச்சம்

(கொழும்பு)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கு, ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் இணைந்து இலங்கையின் இரு அமைப்புகளும் ஆதரவாக செயற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முஸ்லிம் மதத்தைச் சார்ந்த குறித்த இரு அமைப்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, முகத்தை மறைக்கும் அபாயாக்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளன. ஹிஜாப் எனப்படும் காதை மூடி அணியும் ஒருவகையான ஆடையையும் அகற்றுமாறு அரச நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை போன்ற பல இடங்களில் முஸ்லிம் பெண்கள் பணிக்கப்படுவதாக நாளாந்தம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் முஸ்லிம் மக்கள், தாக்குதலைத் தொடர்ந்து அப்பாவி முஸ்லிம் மக்கள் குறிவைக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றனர். இது பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பதிலாக பிரிவினையை அதிகரிக்கச் செய்யுமெனவும் தமிழ் மக்களுக்கும் முன்பு இதுவே நடந்ததென்றும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள தேசிய சமாதான பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா, முஸ்லிம்கள் மீதான சந்தேகம் அதிகரிக்கும் போது அது உள்ளூர் தாக்குதலுக்கு வித்திடுமென எச்சரித்துள்ளார். அது மிகவும் ஆபத்தானது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் சகல மதத் தலைவர்களுடனும் அரசாங்கம் ஆக்க பூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவேவா தெரிவித்துள்ளார். அத்தோடு, நாட்டின் சமூக நிலையைப் பேண சகல பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# மைத்திரி மகனின் திருமணத்தில் தொலைபேசிகளை வைத்திருக்கத் தடை



(கொழும்பு).

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேனவின் திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள், அலைபேசிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேனவுக்கும், இலங்கையின் பிரபல தொழிலதிபர் அதுல வீரரத்னவின் மகள் நிபுணிக்கும், கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் விடுதியில் திருமணம் இடம்பெற்றது.

முன்னதாக ஷங்ரி-லா விடுதியிலேயே நடக்கவிருந்த இந்த திருமணம், அங்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்ததை அடுத்து, ஹில்டன் விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த திருமண நிகழ்வில் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றனர். அரசியல்வாதிகள் எவரும் அழைக்கப்படவில்லை.

திருமணத்துக்கு வந்திருந்தவர்களிடம் இருந்து, விடுதியின் மண்டபத்துக்குள் நுழைய முன்னரே, அலைபேசிகளை ஒப்படைத்து விட்டு செல்லுமாறு கேட்கப்பட்டனர்.

இதன் காரணமாக திருமணம் தொடர்பான எந்தவொரு படங்களும் சமூக ஊடகங்களிலோ வெளியாகவில்லை. படங்கள் வெளியாவதை தடுப்பதற்காகவே இவ்வாறு அலைபேசிகள் திருமண மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.


அதேவேளை திருமணத்தை முன்னிட்டு நூற்றுக்கணக்கான படையினர் ஹில்டன் விடுதியைச் சுற்றி பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

245



சேர்.ஜேம்ஸ் பீரிஸ்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

சட்ட நிருபண சபைக்குப் பிரதேச வாரியாகவும் இனவாரியாகவும் தெரிவு செய்யப்பட்ட 23 அங்கத்தவருள் 16 பேர் சிங்களப் பிரதிநிதிகளாகவும் 7 பேர் மட்டுமே தமிழ்ப் பிரதிநிதிகளாகவும் காணப்பட்டனர்.

மனிங் தேசாதிபதியின் இப் பிரித்தாளும் கொள்கையினூடாக தமிழரின் பிரதிநிதித்துவ உரிமை மிகவும் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்கால அரசியல் சீர் குலைய வழிகோலியது.

அருணாசலம் 1887 இல் இலங்கையின் நிர்வாக சபையில் தன்னை இணைத்துக் கொண்டதிலிருந்து பல உயர்பதவிகளில் கடமையாற்றி பிரித்தானிய அரசின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1906 இல் நிர்வாக சேவையில் இருந்தபோதே சட்ட நிருபண சபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராக தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டவர். பின்னர் 1912 இல் நிறைவேற்றுச்சபை (Executive Council) அங்கத்தவராகவும் தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்.

1913 இல் நிர்வாக சேவைப் பதிவாளர் நாயகம் (Registrar General of Civil Service) என்ற உயர்பதவி வகித்து நிர்வாக சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

1913 இல் பிரித்தானிய அரசினால் சேர் பட்டம் (Knight hood) வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்.

தலைசிறந்த நிர்வாக சேவை அதிகாரியாக பதவி வகித்த அருணாசலம் அரச சேவையில் இருக்கும் போதே இலங்கைத் தொழிலாளர் நலன் லீக் என்ற சமூக நிறுவனத்தை ஸ்தாபித்து அதன் முதல் தலைவராக விருந்து தொழிலாளர் நலன்களுக்காக உழைத்தவர்.

1915 இல் அருணாசலம் தனது சகபாடி சேர் ஜேம்ஸ் பீரிஸுடன் இணைந்து இலங்கை சமூக சேவை லீக் (Ceylon Social Service League) என்ற அமைப்பை ஸ்தாபித்தவர்.

அவர் வெகுசனங்களுக்காக கல்வி, மருத்துவ வசதிகளுக்கான ஏற்பாடு, சிறந்த வீட்டு வசதி, கட்டாயக் காப்புறுதி முறைமை, வறியவர்களுக்கான அதியுச்ச வேதனம் என்பவற்றுக்காக குரல் எழுப்பியவர். இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம் எனக்கூட கோரிக்கை விடுத்தவர்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் இலங்கைத் தேசிய காங்கிரஸின் உருவாக்க கர்த்தாக்களில் ஒருவராகவும் அதன் தலைவராகவும் இருந்தவர்.

இவ்வளவு வல்லமையும் திறமையும் மிக்க அருணாசலத்தால் இலங்கையில் தமிழ் மக்களும் தமிழ்த் தேசமும் கடினமான ஒரு அரசியல் சூழ்நிலைக்கு விரைவாக ஆளாகவிருப்பதை உணர்ந்து கொள்ளமுடியாமல் போயிற்று என ஆச்சரியப்பட வேண் டியுள்ளது.

தமிழரின் பாரம்பரியப் பிரதேசமான இலங்கையில் வட மேற்குப் பகுதியிலுள்ள புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்கள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சிங்களமயமாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அருணாசலம் உன்னிப்பாகக் கவனித்திருக்க வேண்டும்.

அவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் அவர் வடமேற்கு மாகாணத்தின் பிரதிநிதித்துவத்திற்காகக் கடுமையாகப் பாடுபட்டார் என்று கொள்ள முடிகின்றது.

அல்லாவிடில் அருணாசலம் வடக்கு- கிழக்கு பிரதேசத்திற்கான ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்திற்குப் பாடுபட்டிருப்பார் என்று கொள்வதில் தவறிருக்க முடியாது.

இதற்கு அடிப்படைக் காரணம் அருணாசலம் முன்னாள் தமிழ் அரசியல் தலைவர்கள் போல் ஆரம்பத்தில் சிங்களவருக்கும் தமிழருக்கும் தனித்தனியான அரசியல் பிரிவுகள் இருக்க வேண்டும் என எண்ணாது இலங்கைத்தீவு முழுவதையும் உள்ளடக்கும் ஓர் அரசியல் பிரிவைத்தான் ஆதரித்தவராகக் காணப்பட்டார்.

இதன்விளைவாகத்தான் முதலில் அவர் தன் சகபாடியுடன் இணைந்து 1919 இல் இலங்கை தேசிய காங்கிரஸை ஸ்தாபித்து அதன் முதல் தலைவராகவும் செயற்பட்டார் எனக்கொள்ள முடிகின்றது.

ஆனால் அவர் சிங்களத் தலைவர்களினால் ஏமாற்றப்பட்டார். அப்போதுதான் அவருடைய அறிவுக்கண் திறந்து கொண்டது.

தமிழர் இலங்கையில் சிறுபான்மையினர் என்றும் அவர்களுடைய அரசியல் பிரச்சினை ஓர் இனப்பிரச்சினை அல்ல. மாறாக அது ஓர் தேசியப் பிரச்சினை என்றும் உணர ஆரம்பித்தார்.

இந்த உணர்வலைகள் தமிழ் மக்கள் மத்தியிலும் யாழ்ப்பாணச் சங்கத்தினர் மத்தியிலும் ஆழமாக வேரூன்றி தமிழ்த் தேசியவாதத்தின் பிறப்பை உறுதிப்படுத்தியது.

அருணாசலம் தமிழரின் அரசியல் பிரச்சினையை தமிழ்த் தேசியப் பிரச்சினையாக விளங்கி அதனை. ஏற்றுச் செயற்பட ஆரம்பித்த சிறிது காலத்தில் 1924 இல் மரணமடைந்தார்.

இருந்தும் அருணாசலத்தின் அரசியல் விழிப்பு ணர்விலும் அவரால் 1923 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் மகாஜன சபையின் நோக்கத்திலும் இலங்கை முழுவதிலுமுள்ள தமிழரை ஒன்றுதிரட்டி அவர்களுக்கு ஒரு அரசியல் விடிவை ஈட்டிக் கொடுக்க வேண்டும் என்ற வேட்கை இருந்ததாகவே காணப்படுகின்றது.

இக் கட்டான காலகட்டத்தில் தமிழருடைய தேசிய நலனுக்காக வாதாடுவதற்கு தமிழர் மத்தியில் சரியான, நேர்மையான அரசியல் தலைவர்கள் இருக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் டொனமூர் அரசியல் திட்டம் எவ்வளவிற்கு தமிழரின் அரசியல் எதிர்காலத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தியது என்பதை மேற்கொண்டு ஆராய்தல் அவசியமாகும்.

(தொடரும்)



'உங்களின் பாதுகாப்பு எங்களின் பொறுப்பு'

# போலியான செய்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம்

## பாதுகாப்புச் செயலர் அறிவுரை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பாதுகாப்பு முற்றிலுமாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே பொது மக்கள் தமது வழமையான பணிகளை அச்சமின்றி முன்னெடுக்கலாம் எனவும், பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய சிறப்பு செய்தி யாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர்,


பாதுகாப்புப் படையினர், பொலிஸார், உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணிகளில் 24 மணிநேரமும் ஈடுபட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆயுதங்கள், வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முப்படையினருக்கும் பொது மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்புத் தர வேண்டும். அவர்கள் 24 மணிநேரமும், உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், மக்கள் வழமைபோல தமது நாளாந்த பணிகளில் ஈடுபட முடியும்.எமது புலனாய்வு அமைப்புகளும், படைகளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நன்கு அறிந்து, உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. உங்களின் பாதுகாப்பு எங்களின் பொறுப்பு.எல்லா பாடசாலைகள், மத வழிபாட்டு இடங்கள், சுற்றுலாத்தலங்கள், விடுதிகள், பொது மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் வெளியாகின்ற போலியான செய்தி களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# றிசாத்தின் குரலை ஒடுக்க பேரினவாதிகள் சதி





(ஓட்டமாவடி)

அமைச்சர் றிசாத் பதியுதீனின் குரலை ஒடுக்கவே பேரினவாதிகள் முயற்சித்து வருவதாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சரான அமீர் அலி குற்றம் சுமத்தினார்.

மேலும், இந்த காரணத்திற்காகவே நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளின்போதும் றிசாத்

## அமீர் அலி எதிர்ப்பு

பதியுதீனுக்கு எதிராக குரல் எழுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.ஓட்டமாவடியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றமிழைத்தவர்களே கைது செய்யப்பட வேண்டியவர்களென்றும் ஆனால், குற்றமிழைக்காத அமைச்சர் றிசாத் பதியுதீனை கைது செய்யுமாறு சில ஊடகவியலாளர்களும் அரசியல்வாதிகளும் கூறுவது தவறான விடயமெனவும் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதி சஹ்ரானின் மனைவி மற்றும் மகளின் புகைப்படம் வெளியானது





(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானின் மனைவி மற்றும் மகளின் புகைப்படம் முதன்முறையாக வெளியாகியுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து கடந்த 26ஆம் திகதி கல்முனையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த சஹ்ரானின் மனைவி மற்றும் மகள் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவர்களிடம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளில் தினமும் பல் வேறுபட்ட அதிர்ச்சியளிக்க கூடிய தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந் நிலையில் தற்போது கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அவர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும்நிலையிலேயே இந்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1718


### பிறேம்குமார்

பெத்தவங்க பேச்சையும் தோத்தவங்க பேச்சையும் கேட்டாலே போதும் நாம முன்னுக்கு வந்திடலாம்



### மோகன்

அடுத்தவரும் பாக்கலாம்னு மொக்கையா காமெடி வேற பண்ணுவாங்க இன்னைல இருந்து




### ஷாட்சி

ஒரு நல்ல நண்பன் நாம விழனும்னு நினைக்க மாட்டான்.. அப்படி விழுந்துட்டா சிரிக்காம இருக்கமாட்டான்




### கர்னிகா

சேர் நம்ம கம்பனிக்கு 100 கோடி லோன் வேணும்... கொடுத்திடலாம் சேர் எந்த நாட்டில செட்டில் ஆகப்போறீங்க...



### யது

தன்வினை தன்னைச் சுடும்



### தனு

நமக்கு இருக்கிறதெல்லாம் பெரிய கஷ்டமா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கை மீதான தாக்குதலுக்கு மேற்குலக நாடுகளே காரணம்



## தயாசிறி ஜெயசேகர குற்றச்சாட்டு

(மீரியகம)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், முஸ்லிம் மக்களின் பிரச்சினையல்ல எனவும் இது இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் மேற்கொண்ட சதித்திட்டம் என தான் நினைப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

மீரியகம தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதால், அமெரிக்காவும் இந்தியாவும் விரோதம் கொண்டன. இலங்கையில் சீனாவின் அழுத்தங்களை இல்லாமல் செய்யும் தேவை அமெரிக்காவுக்கு இருக்கின்றது.

பயங்கரவாதத் தாக்குதல் எப்படி வந்தது. தற்போது இலங்கையை கட்டுப்படுத்துவது நாம் அல்ல. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதும் இந்தியாவும் அமெரிக்காவும் எம்முடன் விரோதமாகின.

ஆசியாவின் அதிகாரம் சீனாவிடம் சென்றால், இவர்களின் பலம் குறைந்து போகும் என இந்த நாடுகள் நினைத்தன. இதனால், இந்தப் பிரச்சினை ஏகாதிபத்தியத்தின் பிரச்சினை அன்றி முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சினையல்ல.

பெரிய நெருக்கடி காரணமாக சீனாவும் அமெரிக்காவும் பொருளாதார தாக்குதல்களை நடத்திக்கொண்டுள்ளன. அதன் இறுதியான பலனை நாம் அனுபவிக்கின்றோம். நாம் பாதிக்கப்பட்டோம். இலங்கையில் அமெரிக்காவுக்கு தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சீனாவின் அழுத்தங்களை இல்லாமல் செய்யும் தேவை அமெரிக்காவுக்கு உள்ளது.

இந்தியா மத்தள விமான நிலையத்தை கேட்கிறது. மறுபுறம் அமெரிக்கா திருகோணமலையைக் கேட்கிறது. அரசாங்கத்தால் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இதுதான் காரணம். ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு சிரியாவில் தோற்கடிக்கப்பட்டது.

சி.ஐ.ஏவின் உளவு அமைப்பாகவே அல்கொய்தா உருவாக்கப்பட்டது. அதனை பயன்படுத்தியே ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சதாம் ஹுசைனை கொலை செய்யும் வரை அது நீடித்தது. லிபியாவில் கடாபியை கொலை செய்தனர். சிரியா, ஏமன் போன்ற நாடுகளிலும் இதுவே நடக்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் அரபு வசந்தம் என கொண்டு வரப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் முழு மத்திய கிழக்கும் செயலிழந்தது. நாட்டில் நடந்த தாக்குதல்களை எவரும் பிரச்சினையாக மாற்றிக்கொள்ளக் கூடாது. அமெரிக்காவின் போராட்டத்தில் இருந்து நாட்டைப் பாதுகாக்க நாம் தயாராக வேண்டும்.

நாட்டின் தற்போதைய அரசாங்கம் சரியில்லை என்றால் வேறு அரசாங்கத்தைப் தெரிவு செய்ய வேண்டும்.


அமெரிக்காவில் ஞானஸ்தானம் கொடுக்கப்பட்டு அனுப்பப்படுவோர் இலங்கையின் அடுத்த அரச தலைவராக வேண்டும் என்று நினைக்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைக்காக ஆட்களைக் கொண்டு வந்து இலங்கையில் முளைக்க வைக்கும் வேலைத்திட்டத்தில் நாம் சிக்கக் கூடாது.

தற்போது சமூகம் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. மனிதர்களிடம் நேர்மையில்லை. அரசியல் குழம்பிப் போயுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அச்சமின்றி தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். அதற்காக கட்சியை வலுப்படுத்த வேண்டும். மற்றவர்களின் விளக்கில் வெளிச்சத்தைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மக்கள் கூட்டம் இருந்தது என்பதற்காக தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பது 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி நிரூக்கப்பட்டது எனவும் தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொது இடங்களில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள முஸ்லிம் பெண்கள்



## செஹான் சேமசிங்க கவலை

(கொழும்பு)

தற்போதைய நிலையில் தேசிய பாதுகாப்பிற்கு பர்தா ஆடை அச்சுறுத்தலாக காணப்படுகின்றது என்று பொதுமக்கள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள். அத்துடன் முஸ்லிம் பெண்களும் இவ்வாறான நெருக்கடிகளுக்கு பொது இடங்களில் முகம் கொடுத்துள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் எவ்வித முறையான வழிமுறைகளும் வகுக்கப்படவில்லை. பர்தா ஆடையை தடை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர வர்த்தமானி வெளியிடப்படவில்லை. ஆகவே அரசாங்கம் தொடர்ந்து மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளையே நெருக்கடி நிலையிலும் வழங்குகின்றது என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களான தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத் மில்லதுல் இப்ராஹிம் மீயா செய்லாணி ஆகிய அமைப்புக்களும், பர்தா ஆடையும் அவசர காலச் சட்டத்தின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றமை மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும்.

இன்றும் அரசாங்கம் அடிப்படைவாத அமைப்புக்களுடன் தொடர்புடையவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் பல கேள்விகளையும், அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளையும் அம்பலப்படுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும் காலங்களில் எவ்வித பிரச்சினைகளும் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை, புதிதாக பிரச்சினைகள் அறிமுகமாகின்றன. 2015 ஆம் ஆண்டு, பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழித்த நிலையில் ஆட்சியை பொறுப்பேற்ற ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து தீவிரவாத தாக்குதலுக்கும் தொடர் அச்சுறுத்தலுக்கும் உட்பட்ட நாட்டை பொறுப்பேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்கொலைதாரிகளின் தாக்குதலைத் தொடர்ந்து 2019 ஆம் இலக்க முதலாவது அவசர சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத் மில்லதுல் இப்ராஹிம் மீயா செய்லாணி ஆகிய அமைப்புக்களைத் தீவிரவாத அமைப்புக்களாக கருதி கடந்த மாதம் 27 ஆம் திகதி இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புக்களாக அறிவித்தார்.

அத்துடன் இவ் அமைப்புக்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அரசுடைமையாக்குவதாகவும் குறிப்பிடப்பட்டது.

ஆனால் இவ்விடயம் தொடர்பில் அதாவது தடை செய்யப்பட்டமைக்காக உத்தியோகபூர்வ வர்த்தமானி வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அடிப்படைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசாங்கம் பேச்சளவிலேயே உள்ளது

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை ஆளும்தரப்பினரும், எதிர்த்தரப்பினரும் தமது அரசியல் பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இவ்வாறான தாக்குதல்கள் மீண்டும் நாட்டில் எவரது ஆட்சியிலும் இடம்பெறாத வகையில் தற்போது சிறந்த திட்டங்களை வகுக்க வேண்டும். குண்டு வெடிப்பு அடிப்படைவாதிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாக பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட்டுக் கொள்கின்றது என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அடிப்படைவாதிகளின் அமைப்பு கடந்த அரசாங்கத்தில் வளர்ச்சி பெற்றது என்று ஆளும் தரப்பினரும், 2015 ஆம் ஆண்டுக்கு பிறகே வலுப்பெற்றது என்று எதிர்க்கட்சியினரும் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டிக் கொள்கின்றார்கள். மிலேச்சத்தனமான தாக்குதல் இன்று அரசியல் கட்சிகளின் பிரதான பேசுபொருளாகி அரசியல் பிரசாரமாகிவிட்டது.

மேற்குலக நாடுகளிலும் இவ்வாறான குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறும்போத அங்கு அரசியல் கட்சிகள் அரசியல் இலாபம் தேடாமல் நாடு எதிர்கொண்டுள்ள சவாலை அனைவரும் ஒன்றிணைந்தே வெற்றிகொண்டு தீவிரவாதத்தை தோற்கடித்துள்ளார்கள். எமது நிலைமை இதற்கு முற்றிலும் மாறுப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 103 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 120 |
| தக்காளி | 140 | 80 | 120 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 160 | 140 | 80 |
| கோவா | 100 | 80 | 100 | 90 | 100 |
| கரட் | 80 | 80 | 100 | 100 | 160 |
| பூசணி | 60 | 50 | 50 | 50 | 60 |
| புடோல் | 100 | 70 | 80 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 80-150 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 65 | 80 |
| பாகற்காய் | 160 | 150 | 160 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 160 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 170 | 100 | 140 | 160 | 80 |
| லீக்ஸ் | 150 | 80 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 90 | 90 | 120 |
| கறிமிளகாய் | 150 | 120 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 280 | 250 | 250 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | — | 90 | 100 |
| கீரை – 1பிடி | 30 | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 360 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 20-40 | 25-30 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 150 | 150 | 150 | 120 |
| வெங்காயப்பூ | 240 | 250 | 250 | 240 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 70 | — |




# அப்பா சொன்ன அட்வைஸ்!



ஒரு காட்டில் பெரிய ஆண் புலி ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் மதிய வெயிலில் மிகப் பெரிய காட்டு மானை அடித்துக் கொன்று, பிறகு மெதுவாக மான் இறைச்சியை ரசித்து உண்ண ஆரம்பித்தது. வயிறு முட்ட உண்ட பிறகு தாகம் எடுத்தது. நேராகக் குட்டையை நோக்கிச் சென்றது. சிறிது தொலைவில் மரங்கள் அடர்ந்த பகுதியில் குட்டைத் தண்ணீர் தேங்கி இருந்தது. அந்த இடத்திற்கு புலி சென்றபோது ஒரு பன்றிக் குட்டி குட்டையில் குளித்து, நீச்சல் அடித்துக் கொண்டிருந்தது.

புலியைப் பார்த்த பன்றிக் குட்டிக்கு பயம் ஏற்பட்டது. குலை நடுங்கியது. தண்ணீரில் இருந்து வெளியே வந்து கரையில் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றது.

புலி அந்தப் பன்றிக் குட்டியை கண்டு கொள்ளவே இல்லை. அதற்கு தாகம் அதிகமாக இருந்ததால் தண்ணீர் குடிக்கும் ஆர்வத்தோடு குட்டையை நெருங்கியது.

தலையைக் குனிந்து குட்டைத் தண்ணீரில் வாய் வைத்தது. தண்ணீர் பன்றிக் குட்டியின் குளியலால் நாற்றம் எடுத்தது.

துர்நாற்றம் வீசுவதைப் புலியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, வேண்டா வெறுப்பாக ஒரு முறை தண்ணீரை நாக்கால் நக்கியது. ஆனால் குடிப்பதற்கு அதற்கு மனமே வரவில்லை. எனவே, அது பன்றிக் குட்டியைப் பார்த்து உறுமிவிட்டு, வேறு நல்ல தண்ணீர் இருக்கும் இடத்தை தேடிச் செல்ல ஆரம்பித்தது.

புலி வந்ததையும் தன்னைக் கண்டதையும் பிறகு தண்ணீர் குடிக்காமல் திரும்பிச் செல்வதையும் பார்த்தது பன்றிக் குட்டி.

"ஓகோ, இந்தப் புலி என்னைப் பார்த்து பயந்து போய் விட்டது. அதனால்தான் தண்ணீர் குடிக்காமல் வந்த வேகத்திலேயே திரும்பிச் செல்கிறது" என்று தப்புக் கணக்குப் போட்டது பன்றிக் குட்டி.

"இளங்கன்று பயம் அறியாது" என்ற பழமொழிக்கு ஏற்ப, ஒரே தாவாகத்தாவி புலியின் முன்னே சென்று நின்றது.

"என்னைப் பார்த்து ஏன் ஓடுகிறாய்? வா, நாம் இருவரும் சண்டை செய்யலாம்" என்று அழைத்தது.

பன்றியின் வார்த்தைகளைக் கேட்டு பக்கத்து மரக்கிளைகளில் இருந்த குரங்குகள் ஆச்சரியம் அடைந்தன. பன்றிக் குட்டிக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என்று பயத்தோடு பார்த்தன.

"இனிமேல் பன்றிக் குட்டியின் உயிரை யாராலும் காப்பாற்ற முடியாது. அது எமலோகத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டது!" என்றது ஒரு செம்முகமந்தி.

மான் கறியை வயிறு முட்டத் தின்று விட்டதால் பசி அடங்கிப் போன புலி, பன்றிக் குட்டியை அலட்சியத்தோடு பார்த்து, "இன்றைக்கு வேண்டாம், நாளை இதே இடத்திற்கு வா. நாம் பலப்பரீட்சை செய்து பார்க்கலாம்" என்று சொல்லி விட்டுச் சென்றது.

"இந்தப் புலி சரியான பயந்தாங்கொள்ளியாக இருக்கிறது. அதனால்தான் இன்று வேண்டாம், நாளைக்கு வருகிறேன் என்றது" என்று நினைத்த பன்றிக் குட்டிக்கு கர்வமும் சந்தோசமும் தாங்க முடியவில்லை.

அது கத்திக் கொண்டே தன் இருப்பிடத்திற்குச் சென்றது. தாயிடம், உறவினரிடம் புலியுடன் தான் சண்டை செய்யப் போவதைச் சொன்னது.

இதைக் கேட்ட பன்றி குடும்பத்திற்குப் பயம் பிடித்துக் கொண்டது. "வீண் வம்பை விலை கொடுத்து வாங்கி வந்து விட்டாயா? புலி ஓர் அறை கொடுத்தால் அதற்குப் பிறகு நீ இருக்கமாட்டாய் தெரியுமா?" என்றது அதன் தாய்.

மற்றப் பன்றிகள் எடுத்துச் சொன்ன பிறகுதான் தன் உடல் வலிமை புலியின் ஆற்றலை விட எவ்வளவு குறைவானது என்பது பன்றிக்குட்டிக்கு தெரிய ஆரம்பித்தது. உடனே பயம் பிடித்துக் கொண்டது. அதன் தலையில் இருந்து கால் வரையில் நடுங்கியது. காய்ச்சல் அடிப்பதைப்போல உடம்பு கொதித்தது. சாப்பிடக் கூட முடியாமல் அது சுருண்டு படுத்துவிட்டது.

பன்றிக் குட்டியின் பயத்தைப் பார்த்தது டாடி பன்றி. "நாளை நீ புலியோடு சண்டை செய்யப் போகிறாயா?" என்று கேட்டது.

"ஆமாம். ஆனால், நான் போகப் போவது இல்லை" என்றது பன்றிக் குட்டி.

"நீ போகாவிட்டால் புலி சும்மா இருக்குமா? அதனிடம் சவால் விட்டு விட்டு வந்திருக்கிறாயே? உன்னை தேடிக் கொண்டு, இங்கேயே வந்து விடும். அப்படி வந்தால் நம் குடும்பத்தினர் அத்தனை பேரையும் ஆத்திரம் கொண்டு கிழித்து எறிந்து விடும்"

"ஐயோ, அது கூடாது டாடி. நான் சண்டைக்குப் போய் செத்தாலும் சாகிறேன்" என்றது பன்றிக்குட்டி பயத்தோடு.

"நீ புலியோடு சண்டைக்கு போ. ஆனால், போகும் போது உன் உடம்பு முழுவதும் எவ்வளவு சேற்றையும் சாணத்தையும் பூசிக் கொள்ள முடியுமோ, அவ்வளவு பூசிக் கொண்டு போ" என்றது டாடி பன்றி. பன்றிக் குட்டி அதற்கு சம்மதித்தது.

மறுநாள் காலையில் எழுந்த பன்றிக்குட்டி காட்டில் இருக்கும் யானை சாணத்திலும் காட்டெருமை சாணத்திலும் புரண்டு புரண்டு எழுந்தது. நாற்றம் சகிக்க முடியவில்லை. அப்படியே அது குட்டைய அடைந்தது. அங்கே புலி தயாராக காத்திருந்தது.

தானாகவே வந்து இரையாக விரும்பும் பன்றிக் குட்டியை விட்டு விட அதற்குப் பைத்தியமா என்ன? ஆகவே, அது குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்து காத்திருந்தது.

பன்றிக் குட்டி வருவதைப் பார்த்த புலி, உதடுகளை நாக்கால் நக்கிக் கொண்டது அருமையான பன்றிக்கறி விருந்து வருகிறது அல்லவா? ஆனால், பன்றிக் குட்டி புலியின் எதிரே வந்ததும், புலிக்கு, சாணத்தின் நாற்றம் தாங்க முடியவில்லை. புலிக்கு பன்றி உடம்பில் ஒட்டியிருந்த யானைச் சாணத்தின் நெடி தும்மலை வரவழைத்தது. அது ஒரு அடி பின்வாங்கி நின்றது. பிறகு பன்றிக் குட்டியை பார்த்து, "சே. அருகே வராதே! நாற்றம் சகிக்கவில்லை" என்றது.

"அப்படியானால் என்னுடன் சண்டை செய்ய வரமாட்டாயா?" என்றது பன்றிக்குட்டி "முதலில் நீ இங்கே இருந்து கிளம்பு. எனக்குக் குடலைப் பிரட்டிக் கொண்டு வாந்தி வருவதைப் போல இருக்கிறது" என்ற புலி, மேலும் இரண்டு அடிகள் பின்னால் தள்ளி நின்றது.

அது போதும் என்று நினைத்த பன்றிக்குட்டி தலைதெறிக்கும் வேகத்தில் அங்கே ஓடி மறைந்தது. டாடி பன்றி சொன்ன யோசனையினால் பன்றிக்குட்டி புலியிடம் சிக்கி உயிர் விடாமல் தப்பியது.

குட்டீஸ் நீங்கள் எப்போதுமே உஷாராக இருக்க வேண்டும். உங்கள் பலத்தை உணராமல் வீம்பு செய்யக் கூடாது.

## விடுகதைகள்

• ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?

எறும்பு

• உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?

தராசு

• இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது - அது என்ன?

வான வெடி

• எப்போதும் காதருகில் இரகசியம் பேசிக் கொண்டிருப்பவள், அவள் யார்?


செல்போன்/கைப்பேசி

• பார்க்கத்தான் கறுப்பு ஆனால் உள்ளமோ சிவப்பு. நயக்குத் தருவதோ சுறுசுறுப்பு அது என்ன?

தேயிலை

## இளமைப் பருவம்





மலையைத் தூக்கி தலைமில் வைக்க
மார்பு தட்டும் பருவம்
கலைகள் கற்று புலமையாலே
கருத்து மலரும் பருவம்

இளமைப்பருவம் இனிய பருவம்
எழுச்சி நல்கும் பருவம்
விளையும் அன்பும் தொண்டும் வாழ்வில்
விருந்து செய்யும் பருவம்

நாட்டை மொழியை அடிமை ஆக்க
நாங்கள் இங்கு வாழ்வோம்
ஈட்டி முனையில் உயிரைக் கொடுப்போம்
என்றெழும்பும் பருவம்

அன்பு எங்கிருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார்.

~ மகாத்மா காந்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாதுகாப்பு விடயத்தில் அனைவரும் விழிப்படைவோம்

நாட்டில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து படையினர் நடத்தும் தேடுதல் நடவடிக்கையில் அறியப்படும் ஆயுதங்களும் போர்ப்பயிற்சி இடங்களும் மிகப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இதனடிப்படையில் இஸ்லாமியத் தீவிரவாதம் இலங்கை மீது மிகப்பெரும் தாக்குதலை நடத்தும் எண்ணத்துடன் செயற்படுகிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

இந்நிலையில், இலங்கையில் தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்ற எச்சரிக்கைகளும் ஊகங்களும் அசட்டை செய்யக் கூடியவையல்ல.

நேற்று அம்பாறையில் படையினர் நடத்திய தேடுதலின்போது கடலுக்கு அடியில் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய நவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதான தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேற்போந்த இயந்திரம் கடற்படையின் அதிவேகப் படகுகளின் வேகத்தை விடப் பல மடங்கு வேகம் கொண்டதென கடற்படையின் கருத்து அமைகிறது.

எனவே இஸ்லாமியத் தீவிரவாதத்தின் தாக்குதல் நடவடிக்கை தொடர்பில் எவரும் அசமந்தமாக இருந்துவிடக்கூடாதென்பது உறுதியாகிறது.

அதிலும் இன்று 13ஆம் திகதி அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் ஆரம்பமாகின்றன.

இதனால் காலை வேளையிலும் மதியத்தின் போதும் மாணவர்கள் நடமாடுகின்ற சூழ்நிலை ஏற்படும்.

தனித்து பாடசாலைகளில் சோதனை நடத்துவதும் பாடசாலையின் நுழைவாயிலில் பாதுகாப்புப் படையினர் காத்திருப்பதுமான செயற்பாடுகள் மட்டும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போதுமானவையல்ல.

மாறாக, மாணவர்களை ஏற்றிச் செல்லும் போக்குவரத்து பஸ் வண்டிகள், மாணவர்கள் காத்திருக்கும் பஸ் நிலையங்கள், பாடசாலை வளாகத்தின் அனைத்துப் பகுதிகள் என எங்கும் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதேநேரம் தனித்துப் படையினரும் பாடசாலை நிர்வாகமும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதென்பதும் முடியாத காரியம்.

எனவே நாம் அனைவரும் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்பாக இருப்பதுடன் எதையும் மிக நுணுக்கமாக நோக்குகின்ற நுட்பத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின் பாடசாலைகளின் பாதுகாப்பு என்ற விடயத்தில்; பாடசாலைகளைச் சுற்றிக் குடியிருப்போர், வர்த்தக நிலையங்கள் வைத்திருப்போர். மற்றும் அப்பகுதிகளில் இயங்கும் இதர அமைப்புக்கள் என அனைத்துத் தரப்பும் விழிப்போடு செயற்படும்போதுதான் பாதுகாப்பு என்ற விடயம் நூறு வீதம் உத்தரவாதமளிக்கப்பட்டதாக இருக்கும்.

இதற்கு மேலாக, நாட்கள் செல்லச் செல்ல பாதுகாப்பு விடயத்தில் தளர்வும் சோர்வும் ஏற்படுவது இயல்பாகும்.

எனினும் அத்தகையதொரு அசமந்த நிலைக்கு இம்மியும் இடம்கொடாது நூறு வீதம் கண்காணிப்புச் செலுத்துவதாக பாதுகாப்புச் சூழமைவு இருக்க வேண்டும்.

இதுவே பாடசாலையின் சுமுகமான – பாதுகாப்பான இயங்குநிலைக்கு அவசியமாகும்.

# பயங்கரவாத அமைப்பை தடை செய்யும் வர்த்தமானியில் தாமதம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை நடத்திய பயங்கரவாத அமைப்பான தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமேதுல் மில்லாது இப்ராஹிம் ஆகிய இரு அமைப்பினையும் தடை செய்யும் வர்த்தமானி இந்த வாரம் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு செயலாளர் சாந்த கோட்டேகொடவிடம் வர்த்தமானிக்கான ஒப்புதலை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி செயலகம் காத்திருப்பதாலும் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அமைப்புடன் வேறு சில அமைப்புக்களையும் தடை செய்ய வேண்டும் என புலனாய்வுதுறையினர் தெரிவித்தமையால், அந்த செயலமுறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து கடந்த வாரம் கூறியிருந்தார்.

இருப்பினும் தொடர்ந்தும் பாதுகாப்பு தரப்பினர் தடைசெய்ய வேண்டிய மேலதிக அமைப்புக்கள் தொடர்பாக அறிவிக்காத நிலையில் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்களின் அறிவிப்புக்காக தாம் காத்திருப்பதாகவும் தெரிவித்த அவர் இந்த பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு அடுத்த வாரம் வர்த்தமானி பிரசுரிக்கப்படும் என கூறினார்.

முஸ்லிம் அமைப்புகள் உட்பட மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜனாதிபதிக்கு உள்ள அவசரகால நடைமுறைகளின் கீழான விசேட அதிகாரத்தின் கீழ் இந்த அமைப்புக்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஏப்ரல் 27 அன்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டது.

அத்தோடு இரு அமைப்புகளின் அனைத்து சொத்துகளும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (03)

# அரசாங்கம் இனவாதத்தினூடாகவே அரசியல் செய்ய முயற்சிக்கிறது

## நாமல் எம்.பி குற்றச்சாட்டு

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யும் முன்னர், ஜனாதிபதியும் பிரதமரும் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் குற்றம் சுமத்தப்படும் அரசியல்வாதிகளிடம் இதுவரை அரசாங்கம் ஏன் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "தற்போது சில அரசியல் கட்சிகள், இனவாதத்தின் ஊடாக அரசியல் செய்யவே முற்படுகிறார்கள். அரசாங்கமும் இதனையே செய்கிறது. எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ அன்று அனைத்து இன மக்களுக்காகவுமே அரசியல் செய்தார்.

ஆனால், நாட்டில் இடம்பெற்றுள்ள இந்த சம்பவத்தையடுத்து அரசாங்கம் செயறபடும் விதம் வேறு விதமாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (3)

# பயங்கரவாத ஊடுருவல் பூரணமாக தடுக்கப்படவில்லை

## மத்தும பண்டார தகவல்

நாட்டில் இன்னமும் பயங்கரவாத ஊடுருவல் பூரணமாக தடுக்கப்படவில்லை என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலவரங்கள் மற்றும் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நாட்டில் பலர் இன்னமும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டு உள்ளனர் என்ற தகவல் எமக்கு கிடைத்துள்ளது.

ஆகவே அது குறித்து தேடுதல் பணிகள் பாதுகாப்பு படைகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாத ஊடுருவல் இன்னமும் பூரணமாக தடுக்கப்படவில்லை.

அதேபோல் கைது செய்யப்பட்டவர்களின் விசாரணைகளின்போது குற்றங்களுடன் தொடர்பில் இல்லாத நபர்களை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (3)

# திருகோணமலையில் மோட்டார் குண்டு மீட்பு

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று காலை மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்குச் சென்ற பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து இந்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

மூதூர் நீதிமன்றத்தின் அனுமதியை பெற்ற பின்னர் குறித்த குண்டினை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் விசேட பொலிஸ அதிரடிப்படையினரால் மேற கொள்ளப்பட்டுள்ளது. (3)

## மாணவர்கள் விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்ப பாடங்களில் கல்வியைத் தொடர விரும்பும் தகுதி வாய்ந்த மாணவர்கள் நாளை மறுதினம் 15 ஆம் திகதிக்கு முன்பு கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அதிபர் அறிவித்துள்ளார். (இ

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆதியே அனைத்தும்



இந்த அகண்டாகாரமாக உள்ள பிரபஞ்சத்தை நினைவில் கொள்வோம். தோற்றங்களாகவுள்ள எல்லாவற்றையும் கழித்து அவற்றின் மூலப் பொருளாகவுள்ள ஆகாசத்தை (Ethereal Particle) நினைத்துக் கொள்வோம். நுண்ணிய இயக்கத்துகள்கள் முதல் கொண்டு பெரும் பெரும் நட்சத்திரங்கள் வரையில் ஒவ்வொன்றிலும் (1) தன்னியக்கச் சுழல் விரைவு (Self rotative force) (2) ஒன்றால் மற்றொன்று தூண்டப் பெற்றுத் தொடரியக்கம் (Chain action) (3) மோதுதலிலிருந்து எழும் பிரதிபலிப்பு (Reflex action) (4) அவ்வவற்றுக்கேற்ற விளைவுகள் (Results) என்று நான்கு வகையான இயக்கங்கள் நடைபெறுவதை உணருவோம். ஆகாசம் என்னும் நுண்துகள்கள் தான் விஞ்ஞானிகளால் Ethereal Particle அல்லது நுடநஉ வசழலெ என்று சொல்லப்படுகிறது. அது இயங்கும் இடத்திற்கேற்ப, அது பெறும் மாற்றம், சிறப்பு இவைகளிலிருந்து மின் அணு (Electron), கரு அணு (Neutron), துணைக்கரு அணு (Proton) எனப் பேசப்படுகிறது.

உதாரணமாக, ஒரு குடும்பத்தில் மூன்று ஆண்கள், மூன்று பெண்கள் உள்ளனர் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஆண்களில் ஒருவரைப் பேரன் என்றும், மற்றவரைத் தந்தை என்றும், மூன்றாமவரைத் தாத்தா என்றும் சொல்கிறோம். அதே போன்று பெண் வரிசையில் பேத்தி, அன்னை, பாட்டி என்று கூறுகிறோம். ஒப்பிட்டு நோக்கும் போது ஒன்றுக்கும், மற்றொன்றுக்கும் இடையே பரிணாமத்தால் உள்ள வேறுபாடு, உறவு, சிறப்பு இவைகளைக் கொண்டு தான் பெயர்கள் வேறு வேறாகக் கொடுக்கிறோம். மனிதன் என்ற நிலையில் எல்லோரும் ஒன்றே. இதுபோன்றே ஆகாசமெனும் பரமாணு, பரிணாமத்தால் அடைந்த பல்வேறு தன்மைகளை ஒப்பிட்டு நோக்கும் அறிவு, பெயர்களைப் பலவாக ஆக்குகிறது. இது பிரித்து உணர்வதற்கு எளிதாக உள்ளது.

இந்தப் பகுத்துணரும் ஒப்புவமை நோக்கு (Relative Concept) புலன்களால் விளைந்த சிறப்பாகும். புலன்களைக் கடந்து நிற்கும் திறன் பெற்ற ஆறாவது அறிவு இவை அனைத்தையும் தொகுத்துணரும்போது பெறப்படும் உண்மை எல்லாமே ஒரு பொருள் என்பதாகும். அதுவே பொருள் நிலையில் ஒன்றாகவும், நிகழ்ச்சி நிலையில் வேறுவேறாகவும் உணரப் பெறுகின்றது என்பது விளங்கும்.

# மகளிர் இருபதுக்கு 20 சம்பியனாகியது சூப்பர் நோவாஸ்




மகளிர் இருபதுக்கு இருபது சேலஞ்ச் கிரிக்கெட் தொடரை ஹர்மன்பிரீத்கவுர் தலைமையிலான சூப்பர் நோவாஸ் அணி வென்றது.

மூன்று அணிகளுக்கு இடையிலான மகளிர் இருபதுக்கு இருபது சேலஞ்ச் கிரிக்கெட் போட்டி ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

இந்த தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. வெலோசிட்டி-சூப்பர் நோவாஸ் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சூப்பர் நோவாஸ் அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய வெலோசிட்டி அணியில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் விழுந்தன. எனினும் சுஷ்மா வர்மா 32 பந்துகளில் 40 ஓட்டங்களும், அமிலியா கெர் 36 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதன்மூலம், அந்த அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் ஆடிய சூப்பர் நோவாஸ் அணியில் பிரியா புனியா 29 ஓட்டங்கள் எடுத்தார். ஜெமிமா ரோட்ரிகஸ் 22 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனார்.

ஒரு முனையில் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும், கேப்டன் ஹர்மன்பிரீத் நங்கூரம் போல் நின்று ஆடினார். அரைசதம் அடித்த அவர் வெற்றியை நெருங்கிய சமயத்தில் ஆட்டமிழந்தார். அவர் 37 பந்துகளில் 3 சிக்சர், 4 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்கள் எடுத்தார்.

சூப்பர் நோவாஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது. (க)

# ஓடியது என்னமோ மூன்று ஓட்டம் கிடைத்ததென்னமோ ஒரு ஓட்டம்

## என்னைப் பார்த்து நானே சிரித்தேன்




வீரர் பாப் டு பிளீசிஸ், டெல்லிக்கு எதிரான போட்டியில் அரைசதம் விளாசியது குறித்து தெரிவித்துள்ளார்.

டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, டெல்லி அணியை வீழ்த்தியது.

இப் போட்டியில் தொடக்க வீரராக களமிறங்கிய பாப் டு பிளீசிஸ் 39 பந்துகளில் ஒரு சிக்சர், 7 பவுண்டரிகள் 50 ஓட்டங்கள் விளாசினார். தொடக்கத்திலேயே வாட்சன் மற்றும் டு பிளீசிஸ் இருவரில் ஒருவர் ரன்-அவுட் ஆக வேண்டிய நிலை இருந்தது.

ஆனால், இந்த ரன்-அவுட் வாய்ப்பை டெல்லி அணி நழுவ விட்டது. இந்நிலையில் டுபிளீசிஸ் போட்டி குறித்து கூறுகையில், 'கடந்த 5, 6 போட்டிகளாக நாங்கள் சரியாக ஆடவில்லை. பெரிய போட்டியில் வென்றதால் எங்களுக்கு தன்னம்பிக்கை இருந்தது.

அதிலிருந்துதான் வலுவான மனநிலையை பெற்றோம். முந்தைய இரண்டு போட்டிகளை இங்கு பார்த்தபோது பிட்ச் நன்றாக இருந்தது. வீரர்கள் பெரிய ஷாட்களை ஆடினர். அதே போன்ற பிட்சைத்தான் எதிர்பார்த்தோம். ஆனால், பிட்ச் எதிர்பார்ப்புக்கு இணங்க இல்லை.

தொடக்கத்தில் கொஞ்சம் நேரம் எடுத்துக்கொண்டு ஆடினால், கூட்டணி அமைத்து அதனை பிறகு நீட்டிப்பதே எங்கள் பலமாக இருந்தது. பின்னால் நல்ல துடுப்பாட்ட வீரர்கள் இருப்பதால் ரன் ரேட் என்னவாக இருந்தாலும் பிடித்துவிடலாம் என்றே நினைத்தோம்.

ஆ.. அந்த ரன்-அவுட் வாய்ப்பு.. ஆம் ஓடியது என்னவோ ஒரு ஓட்டம் தான், ஆனால் நான் 3 ஓட்டங்கள் ஓடியதாக நினைக்கிறேன். நான் என்னைப் பார்த்தே சிரிக்க வேண்டியதாயிற்று, காரணம் அது ஒரு மோசமான ரன்னிங்' என தெரிவித்துள்ளார். (க)

# வட்சனுக்கு வழங்கப்படும் வாய்ப்புப் போல யுவராஜ்சிங்கிற்கு வழங்காதது ஏன்?

## ரசிகர்கள் அதிருப்தி



ஆட்டத்தை வெளிப்படுத்தா விட்டாலும் சென்னை அணியில் வட்சனுக்கு டோனி மீண்டும் மீண்டும் வாய்ப்பளிக்கும் போது மும்பை இந்தியன்ஸ் அணியில் யுவராஜிற்கு வாய்ப்பளிக்கப்படாமல் இருப்பது அவர்களுடைய ரசிகர்களை பெரும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

சென்னை அணியில் துவக்க ஆட்டக்காரராக களமிறங்கி விளையாடி வரும் வட்சன் சிறப்பாக விளையாடவில்லை என்றாலும் கூட, அணியின் தலைவன் டோனி தொடர்ந்து வாய்ப்பளித்து வருகிறார்.

ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் வட்சன் 96 ஓட்டங்களும், டெல்லி அணிக்கெதிரான போட்டியில் 50 ஓட்டங்களும் எடுத்து மட்டுமே இந்த ஆண்டு அவர் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும்.

இதுபோல சிறப்பாக விளையாடாத முன்னணி வீரர்கள் பலருக்கும் டோனி தொடர்ந்து வாய்ப்பளித்து வருகிறார்.

ஆனால் அதே சமயம் மும்பை அணியில் விளையாடி வரும் யுவராஜ் சிங், 4 போட்டிகளில் மட்டுமே பங்கேற்றுள்ளார். அதில் ஒரு போட்டியில் மட்டும் 53 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அணியின் தலைவன் ரோகித்சர்மா அவருக்கு அதிக வாய்பளிக்காமல் இருப்பதால் ரசிகர்கள் பெரும் வேதனையடைந்துள்ளனர். (க)

# பாண்டிற்கு தமிழ் கற்றுத்தந்த டோனி மகள் குட்டித் தேவதை



இந்திய அணியின் இளம் வீரர் ரிஷாப் பண்டிற்கு, டோனியின் மகள் தமிழ் கற்றுத் தரும் வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் அணியை வீழ்த்தி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. இந்த தொடரின் தொடக்கத்தில் இருந்தே டோனிக்கும், ரிஷப் பண்டிற்கும் இடையே ஒரு வித போட்டி நிலவி வந்தது.

இருவருமே தங்களது அணிக்காக சிறப்பான பங்களிப்பை தமது துடுப்பாட்டத்தின் மூலம் அளித்தனர். இந்நிலையில் போட்டி முடிந்ததும் மைதானத்தில் டோனியும், ரிஷாப் பண்ட்டும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

இதுதொடர்பான வீடியோ ஒன்றை ஐ.பி.எல் நிர்வாகம் தமது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. , அதில் டோனி, ரிஷப் பண்டிற்கு ஆலோசனை கூறுவது போல் இருந்தது. இதற்கிடையில் டோனியின் மகள் ஜிவா, ரிஷாப் பண்டிற்கு தமிழ் கற்றுக் கொடுப்பது போன்ற வீடியோ ஒன்றும் வெளியாகியுள்ளது.

அதில் டோனி மகள் ஜிவா தனது கொஞ்சும் தமிழில் 'அ.. ஆ... இ... ஈ' என பண்டிற்கு சொல்லிக் கொடுக்கிறார். அவரும் அதனை அப்படியே திருப்பிச் சொல்கிறார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பகிரப்பட்டு வருகிறது. (க)

# ஐ.சி.சி. ஊழல் குற்றச்சாட்டு

## செயல்திறன் ஆய்வாளர் பதவி நீக்கம்

இலங்கை கிரிக்கெட் அணியின் செயல்திறன் ஆய்வாளர் பதவியிலிருந்து சனத் ஜெயசுந்தர அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி-யின் ஊழல் தடுப்பு விதிகளை மீறியதாக சனத் ஜெயசுந்தர மீது இரண்டு பிரிவுகளில் ஐ.சி.சி குற்றம்சாட்டியுள்ளது.

அதன் விளைவாக உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் அணியின் செயல்திறன் ஆய்வாளர் பதவியிலிருந்து சனத் ஜெயசுந்தர தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

வீரர்கள் தேர்வு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு இலஞ்சம் வழங்க முயன்றதாக சனத் ஜெயசுந்தர மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14 நாட்களுக்குள் சனத் ஜெயசுந்தர குற்றச்சாட்டு குறித்து பதிலளிக்க வேண்டும் என ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது. (க)

# அவசரகாலச்சட்டம் நீடிப்பது தொடர்பில் பாதுகாப்புச்சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பது குறித்து அடுத்த மாதம் இடம்பெறவுள்ள தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜய வர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து ஏப்ரல் 22 ஆம் திகதி அவசரகால சட்டத்தை அமுல் படுத்த பாராளுமன்றம் அனுமதி வழங்கியது.

நாடுமுழுவதும் அவசரகால நிலையை ஜனாதிபதி பிரகடனப் படுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் பொது பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட குறித்த தீர்மானம் பாராளுமன்றில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துவதன் ஊடாக பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியை பாதுகாத்தல், மக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விடயங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பேணுவதற்காக 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினாலும், தேசிய அரசபேரவையின் 1978 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதன்படி, நாடு முழுவதும் அவசர சட்டத்தை அமுல்படுத்துவதாகவும் நீதிமன்றம் ஒப்புதல் இல்லாமல் சந்தேக நபர்களைக் கைது செய்யவோ அல்லது விசாரணை செய்யவோ பொலிஸ்மற்றும் இராணுவதிற்கு கூடிய அதிகாரங்களை வழங்குவதாக என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

அதுமட்டுமன்றி பொலிஸ் அதிகாரத்தை விரிவுபடுத்தல், தேடுதல், கைப்பற்றுவது, கைது செய்தல் மற்றும் தனிநபர்களை கேள்விக்கு உட்படுத்துவதும் ஜனாதிபதியின் இந்த அவசர கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் நீடிப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## கடலுக்குள் ஊடு...

இந்த அதிநவீன இயந்திரங் எப்படி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன என்பது குறித்து தீவிர விசாரணைகள் நடக்கின்றன.

இலங்கைக் கடற்படையின் அதிவேகப் படகைவிட கூடுதல் வேகத்தில் இந்த நீர்மூழ்கி இயந்திரங்கள் செல்லும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (3)

## தமிழர்களுக்காக வீதியில்...

அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டுமாவடி பிரதேசங்களின் சோதனை நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதே வேளை பாடசாலை மாணவர்களுக்கு சரியான பாதுகாப்பு வழங்க அரசுக்கு இரண்டு வாரகாலம் அவகாசம் தருகின்றோம் அதனை அரசு உறுதிப்படுத்தவில்லை என்றால் நாங்கள் வீதிக்கு இறங்க வேண்டி ஏற்படும் என மட்டக்களப்பு மங்களராமா விகாரை விகாராதிபதி சுமணரட்ன தேரர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள நிலமை தொடர்பாக புத்திஜீவிகள், இந்துகுருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மங்களராமா விகாரை விகாராதிபதி சுமணரட்ன தேரரைச் சந்தித்துதற்போதைய நிலமை தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த 3 கிழமையாக நாட்டில் பாதுகாப்பு அற்ற நிலை இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். இந்த பிரச்சினை தொடர்பாக அரசியல்வாதிகள் அதிகாரிகளிடம் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வாள்கள் உடனடியாக இல்லாமல் செய்யப்பட்டு நம்பிக்கையை உறுதிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

மேலும் காத்தான்குடி பிரதேசத்தில் சஹ்ரான் இருந்து கொண்டு கிழக்குமாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவின் அறிவுறுத்தலுக்கும் அதிகாரத்தையும் பயன்படுத்தி சஹ்ரான் இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவை கட்டியெழுப்பியிருந்தார்.

அது மட்டுமல்ல சில சட்டத்தரணிகள், நீதவான்களும் அதனுடன் தொடர்பு பட்டிருக்கின்றனர். அதனை நிரூபிப்பதற்கான சாட்சி இருக்கின்றது. இது வரைக்கும் சஹ்ரான் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிப்பது எவ்வாறு?

ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவின் காரியாலயத்தில் துப்பாக்கி ரவைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். அது பொலிஸ் உத்தியோகத்தர் எடுத்துச் சென்ற ஆயுதங்கள் எனவும் அதனை அங்கு விட்டு விட்டு வந்ததாகவும் கடைசியில் அதற்கு கதை ஒன்று கூறினர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவ்வாறு பொறுப்பில்லாமல் ஆயுதங்களை விட்டு விட்டு வரமுடியுமா? அது பாரதூரமான பிரச்சினை ஆகையினால் அவர்கள் இவ்வாறு விடுதலை செய்தது எந்த நோக்கத்திற்காக என்றும் எமக்கு தெரியாது. ஆனால் இறுதியாக பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் 30 வருட யுத்தத்தினால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த இம்மக்களுக்கு மீண்டுமோர் துயரத்தை ஏற்படுத்துவதா?

இந்த அப்பாவி தமிழ்மக்களின் பிள்ளைகளை பலாத்காரமாக சஹ்ரான் கடத்தி கொண்டு சென்று இந்த குழுவில் இணைத்துக் கொள்வதாக தகவல் கிடைத்துள்ளது. இதில் பாதிக்கப்பட்ட தாயார் தனது மகளை கடத்திக் கொண்டு சென்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்க சென்றபோது முறைப்பாட்டை ஏற்கவில்லையாம்.

எனவே இவ்வாறான பிரச்சனைகளுக்கு பெற்றோரை தள்ளவேண்டாம் என பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு மதகுரு என்ற வகையில் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

மேலும், இந் நாட்டில் எல்லோருக்கும் பொதுச்சட்டம் இருக்க வேண்டும் அந்த சட்டத்தை ஒவ்வொருவருக்கும் பிரித்து வழங்கியதன் பிரதிபலன்தான் இது என்றார்.

அனைவருக்கும் பொதுவான சட்டத்தை நடை முறைப்படுத்துங்கள் என அரசுக்கு மிகவும் பொறுப்புடன் இந்த விடயத்தை அறியத்தருவதோடு, நிர்வாகத்துறை, அரச திணைக்களம், நீதிமன்றங்கள் பாடசாலைகள் போன்ற அரச திணைக்களங்களில் எப்படி இஸ்லாமிய பெண்கள் உடல் முழுக்க உடையை போர்த்திக் கொண்டு உள்நுழைவது? அரசுக்கு உரித்தான ஒழுக்க ரீதியான உடைகளை உடுக்குமாறு இந்த தமிழ் சிங்கள பெண்களுக்கு சாரி ஒசரி அணியுங்கள் என கூறிக் கொண்டு ஏன் இந்த முஸ்லீம் பெண்களுக்கு மட்டும் இந்த பௌத்த நாட்டினுள் இந்த மாதிரி ஒரு விடயத்தை அனுமதித்துள்ளனர்.

இவ்வாறான உடையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டிலும் இவ்வாறான தாக்குதலை செய்வதற்கு அவர்கள் முன்வந்திருக்கின்றனர் ஆகையினால் இந்த விடயம் தொடர்பாக கவனத்தை செலுத்துங்கள்.

அவசரகால மற்றும் பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தி எந்த ஒருவரையும் சிறைப்படுத்தலாம். ஆனால் இந்த நாட்டிற்குள் சேதத்தை ஏற்படுத்தி வருபவர்களை கைது செய்யாது நியாயத்தை கதைக்கும் மக்களை கைது செய்வது என்பது தொடர்பாக நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், அரசாங்க அதிபர், கல்வி பணிப்பாளர்கள் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எதிர்வரும் புதன் கிழமை அறியப்படுத்த உள்ளோம் அதன் பிறகு அவர்கள் சரியான தீர்வை முன்வைக்காவிடின், நாங்கள் வீதிக்கு இறங்கவேண்டி ஏற்படும் என அவர் உறுதியாக தெரிவித்தார். (3)

## அமைதியை சீர்குலைக்கும் முயற்சி...



றாட நடவடிக்கைகளை சுமுகமாக முன்னெடுத்துச் செல்லுமாறும் ஜனாதிபதி அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று பிற்பகல் காலி மாவட்ட அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு துறை பிரதானிகளுடன் காலி தக்ஷிண பாய கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளும் அதற்காக பிரதேச அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளினால் பாதுகாப்பு துறையினருக்கு கிடைக்கப்பெற வேண்டிய ஒத்துழைப்பு தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் இந்த சந்திப்பு தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் மத்திய மாகாணங் களுக்கான கூட்டத் தொடர்கள் அண்மையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

நேற்று இடம்பெற்ற காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான சந்திப்பில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பேதமின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

காலி மாவட்ட சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பு நிலைமை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதைப் போன்று தோற்றத்தை சித்திரிப்பதற்கு சிலர் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அதன் காரணத்தினால் இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து மக்களும் தெளிவுடனும் புத்திசாதுர்யத்துடனும் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாத சம்பவம் ஒரு புறமிருக்க சிங்கள மற்றும் முஸ்லிம்மக்களுக்கிடையே பகைமையை உருவாக்குவதற்கு சிலர் முயற்சித்து வருவதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

நாட்டின் இனங்களுக்கிடையே இருக்க வேண்டிய நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் உறுதிப்படுத்தி, அமைதியான சமூகத்தை உருவாக்குவதற்கான பொறுப்பை ஆற்றுவதற்கும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தும் போலியான பிரசாரங்களுக்கு அகப்படாமல் அன்றாட வாழ்க்கையை சுமுகமான முறையில் நடத்தி செல்வதற்கு சமுதாயத்தை அறிவூட்டுவதற்கு மதத் தலைவர்கள், பிரதேச அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். (3)

## எவரையும் பாதுகாக்க போவ...

சேர்ந்த 920 பேருக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் நேற்று பிரதமர் இதனை கூறியுள்ளார்.

குண்டு வெடிப்பு சம்பவங்கள் காரணமாக இலங்கையின் அரசியலில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கை இல்லாமல் போனது.

அரசியல் மீது நம்பிக்கை இல்லாமல் போனது. சம்பவங்கள் நடந்து 9.00 மணி நேரத்தில் ஐ.எஸ்.பயங்கரவாதிகளை பிடிக்க முடிந்தது. அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக பிரதானமான அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதேனும் குற்றச் சாட்டு இருந்தால், எவரும் பாதுகாக்கப்பட மாட்டார்கள்.

இதற்கு அமைய செயற்பட நாம் விரும்புகிறோம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் கயந்த கருணாதிலக்க மற்றும் வஜிர அபேவர்தன உட்பட பலர் கலந்துக்கொண்டனர். (3)

மஹஜன சம்பத
திகதி 2019/05/12
சீட்டிழுப்பு இலக்கம் 3915
N 7 2 2 3 2 9

தன நிதானய
திகதி 2019-05-12
சீட்டிழுப்பு இலக்கம் 148
O 01 27 33 79

கொவிசெத
திகதி 2019.05.12
சீட்டிழுப்பு இலக்கம் 2117
G 36 45 48 57

நீரோகா
திகதி 2019/05/12
சீட்டிழுப்பு இலக்கம் 545
தனுசு 23 38 56 72

# மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகவே...

முற்பகல் பொலநறுவையில் இடம் பெற்ற நிகழ்வின்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எழுச்சிபெறும் பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத் தின் கீழ் ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் மொபிடெல் நிறுவனங்கள் இணைந்து 2,500 மில்லியன் ரூபாய் செலவில் செயற்படுத்தப் பட்ட பல்வேறு வேலைத்திட்டங் களை ஜனாதிபதி நேற்று மக்களி டம் கையளித்தார்.

இதன்போது பொலநறுவை நகரை இலங்கையின் முதலாவது ஸ்மார்ட் நகரமாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தினார். பொலந றுவை தீபபூங்காவில் அமைக்கப் பட்ட 5G தொடர்பாடல் கோபுரம் மற்றும் ஹபரண - பொலநறுவை வீதியில் தற்போதுள்ள தொடர் பாடல் குறைபாடுகளை சரி செய்வ தற்கான தொடர்பாடல் கோபுரத்தை யும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து மத்திய கலாசார நிதியத்தினூடாக பொல நறுவை நகரில் நிர்மாணிக்கப்பட் டுள்ள வர்த்தக கட்டிட தொகுதியை யும் ஜனாதிபதி திறந்து வைத்தார். 18 கடைகளைக் கொண்ட இந்த வர்த்தக கட்டிடத் தொகுதியானது 44 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தமன்கடுவ முன்னாள் அர சாங்க அதிபருக்கு சொந்தமான பழைமைவாய்ந்த உத்தியோக பூர்வ இல்லத்தை கலாசார சொத் தாக மத்திய கலாசார நிதியத்திற்கு பெற்றுக்கொண்டதன் பின்னர், அதனை அகற்ற முடியாத காரணத் தினால் அக்கட்டிடத்தின் கலாசார தனித்துவத்தை பாதுகாக்கும் வகை யில் மறுசீரமைத்து உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணி களின் கவனத்தை ஈர்க்கும் வகை யில் இந்த வர்த்தக கட்டிட தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து கட்டிட தொகுதியை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை பார்வையிட்டதுடன், கடை உரிமை யாளர்களுக்கு கடைகளை கையளிக் கும் நிகழ்விலும் கலந்துகொண் டார். வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி கள் ஜனாதிபதிக்கு விசேட நினை வுப் பரிசொன்றையும் வழங்கி வைத்தனர்.

அதன்பின்னர் நவீன தொழி நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன மயப்படுத்தப்பட்ட பொலநறுவை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத் தின் பிராந்திய அலுவலகத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அவ்வலுவலகத்தின் முதலா வது வாடிக்கையாளருக்கு இணைய வசதி ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டதுடன், நவீனமயப்படுத் தப்பட்ட அழைப்பு நிலையத்தை யும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து பொலந றுவை சந்திர மண்டபத்தில் இடம் பெற்ற விழாவின்போது மாகாணத் தில் அமைந்துள்ள 110 பாடசாலை களுக்கு இலவசமாக இணையத்தள வசதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வை அடையாளப் படுத்தும் முகமாக 10 பாடசாலை களுக்கு ஜனாதிபதி அன்பளிப்பு பத்திரங்களை வழங்கி வைத் தார்.

மொபிடெல் நிறுவனத்தினால் இலவசமாக வழங்கப்பட்டுள்ள கிராமிய இணையத்தள வசதிகளின் கீழ் நவகினி தமன மகா வித்தி யாலயத்தின் மாணவ, மாணவி களை நேரலையில் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்திய ஜனாதிபதி இத்தகைய வசதிகளை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப் பது நவீன உலகத்தின் கதவுகளை திறந்து வைக்கும் நோக்கத்துடன் என்றும் நவீன தொழிநுட்பத்தின் நன்மைகளை மாத்திரம் பயன் படுத்தி உலகை வெற்றிகொள்ளக் கூடிய எதிர்கால சந்ததியினரை நாட்டில் உருவாக்குவதே நோக்க மாகும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க, பொலந றுவை நகரபிதா சானக சிதத் ரண சிங்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதி களும் அமைச்சின் செயலாளர் கள், மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் தலை வர் குமாரசிங்க சிறிசேன உள் ளிட்ட பணிப்பாளர் குழாமினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அதனைத்தொடர்ந்து பொலந றுவை நூதனசாலையின் நிர் மாணப் பணிகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (3)

# யாழில் கொள்ளைகளுடன்...

யிருந்த போது கைது செய்யப்பட்ட னர். அவர்களிடமிருந்து 33 தங் கப் பவுண் நகைகளும் 3 மோட் டார் சைக்கிள்களும் கைப்பற்றப் பட்டன என்று பொலிஸார் குறிப் பிட்டனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைய நாட்களாக திருட்டுக் கள், கொள்ளைகள் மற்றும் வழிப் பறிச் சம்பவங்கள் அதிகரித்துள் ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப் பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக அவற்றுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாரத்னவின் கீழான சிறப்பு குற்றத் தடுப்பினர் விசாரணை களை முன்னெடுத்தனர்.

நீதிமன்றப் பிடியாணைகளைக் கொண்டு தலைமறைவாகியோரைத் தேடி பொலிஸார் வலைவீசினர். அரியாலை பூம்புகார் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வீடொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், அங்கி ருந்த நால்வரைக் கைது செய்த னர். அவர்களிடம் முன்னெடுக் கப்பட்ட விசாரணைகளின் அடிப்படை யில் மேலும் இருவர் கைது செய் யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் கடந்த 24 மணித்தியாலங்களில் முன்னெடுக் கப்பட்ட விசாரணைகளில் திருட்டு, கொள்ளையிடப்பட்ட நகைகள் 33 பவுண் மீட்கப்பட்டன. அத்துடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் களும் கைப்பற்றப்பட்டன.

மேலும் சில நகைகள் மற்றும் பொருள்கள் விற்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெ டுக்கப்படுகின்றன.

அத்துடன் சந்தேகநபர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்டத்தி லுள்ள நீதிமன்றங்களினால் பிறப் பிக்கப்பட்ட 21 பிடியாணைகளும் பொலிஸாரால் நிறைவேற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் ஆறு பேரும் சான்றுப்பொருள்களுடன் யாழ்ப் பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (3)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஆரம்பப்பிரிவு...

தரம் 6 தொடக்கம் 13 வரை கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போதும் தரம் 1 தொடக்கம் 5 வரை யான ஆரம்பப் பிரிவுகள் இன்று திங் கட்கிழமையே ஆரம்பிக்கப்படுகின்றன.

நாட்டில் சுமுகநிலை ஏற்பட் டுள்ளதால் இன்று தொடக்கம் பாடசாலைகளில் மாணவர் வரவு அதிகரிக்கும் என்று கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள துடன் படையினரும் பொலிஸா ரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (3)

# தமிழின படுகொலை...

டத்திலும் தமிழ் மக்கள் இனப்படு கொலை இடம்பெற்ற 21 இடங் களில் எதிர்வரும் ஆறு தினங் களில் அஞ்சலி நிகழ்வுகள் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளார்.

அந்த வகையில் நேற்றைய தினம் முள்ளிவாய்க்காலில் ஆரம் பித்து வைக்கப்பட்ட நினைவு நிகழ்வு களை தொடர்ந்து முல்லைத்தீவில் இலங்கை இராணுவத்தின் கிபீர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தன மான குண்டுவீச்சு தாக்குதலில் அநி யாயமாக படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மாணவர்களுடைய வளாகத்திலே நண்பகல் பன்னி ரண்டு முப்பது மணி அளவில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.

குறித்த வளாகத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி நிகழ்வு கள் இடம்பெற்றது. இந்த நிகழ்வில்வடக்கு மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் ஆண்டிஜயா புவனேஸ் வரன் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் பங்கு பெற்றி ருந்தனர். (3-281,250)

# இன்றைய தாக்குதல்...

கிடைத்தால் பாதுகாப்பு தரப்பினரிடம் தெரி விக்குமாறு, பாதுகாப்பு செயலாளர் ஜென ரல் ஷாந்த கொட்டேகொட தெரிவித்துள் ளார்.

தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவலை நிராகரிக்கவில்லை அது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

எனினும் மக்களை அச்சப்படுத்தா மல் கிடைக்கும் தகவல்கள் பாதுகாப்பு பிரிவிடம் வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தாக்குதல் தொடர்பான தகவலை புலனாய்வு பிரிவினர் இன் னும் உறுதி செய்யவில்லை என பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குண சேகர தெரிவித்துள்ளார்.

உறுதி செய்யப்படாத தகவல்கள் பரவுகின்றன. இதுவொரு உறுதி செய்யப் படாத தகவல். இதனை குறித்து அச்சப் பட வேண்டாம்.

அவசியமான அனைத்து பாதுகாப்பு களும் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை களுக்கு அருகிலும் அவசியமான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அச்சமின்றி நாளாந்த வேலை களை செய்யுமாறு அவர் மேலும் தெரி வித்துள்ளார். (3)

# இன்று பாடசாலை குறித்து இரு...

என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடிப்படைவாதிகளை தேடும் நடவடிக்கை கடந்த அரசாங்க காலத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களின் அமைப்புக்குள் புலனாய் வுத் துறையினரை அனுப்பி தகவல்கள் திரட்டப்பட்டிருந்த நிலை மையை மாற்றியமைத்ததன் பின்னர்தான் இந்த நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என்ற தகவல்கள் பரிமாறப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பு தொடர்பில் உறுதியான அத்தாட்சியொன்றை அரசாங்கம் வெளியிடாமல், பாடசாலைகள் திறப்பது குறித்து ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோன்று, விகாரைகளுக்கு அருகில் வெசாக் தின நிகழ்வு களை மிகுந்த அவதானத்துடன் முன்னெடுக்க வேண்டியுள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் சமாதானமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதாக உறுதிமொழியொன்று அவசியம் எனவும், ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே குரலில் இதனை அறிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். அனுராதபுரத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (3)

## சிறுநீரகம் தேவை

B அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு :
076 239 9874
(8753)

## பெண்களுக்கான வேலை வாய்ப்பு

தகுதி A/L கணனி, கணக்கியல் மற்றும் ஆங்கில அறிவு. வயது வரம்பு 20-35
முழு நேரம், (பகுதி நேர வாய்ப்பு இல்லை)
அலுவலக உத்தியோகத்தர், கணக்கியல் உதவியாளர்
யாழ் நகரில் பெண்கள் மட்டும்.

British college of Higher Studies
Sirambiyady Lane Off Stanley Road
076 138 0212, 021 222 4550
(C-6364)

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6752)

## வேலைவாய்ப்பு

எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளுக்கு முகாமைத்துவத் துறையில் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு ஆரம் பமாகவுள்ளது. (தகுதி O/L) 90 நாட்கள் பயிற்சியின் பின்பு சர்வதேச ரீதியாக வணிகத்துறையில் இணைந்த எமது நிறுவனத்திலே நிரந்தர மான பதவிகளும் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் தங்குமிடவசதி, பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சியின் பின் மாதம் ஒன்றிற்கு 45,000/= ற்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு.
(C-6368)
தொடர்புகளுக்கு :- 077 157 1699

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-6335)



CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு வீதி
யாழ்ப்பாணம்
021 5674145
077 2931062
077 6655413

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
(C-6364)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.